# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# வருடாந்த செயற்றிறன் அறிக்கை

# Annual Performance Report

# 2021

**ජාතික ක්‍රමසම්පාදන දෙපාර්තමේන්තුව**

**මුදල්, ආර්ථික ස්ථායිකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය**

**தேசிய திட்டமிடல் திணைக்களம்**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

## Department of National Planning
## Ministry of Finance, Economic Stabilization and National Policies

## 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்றிறன் அறிக்கை
## நிறுவனத்தின் பெயர் : தேசிய திட்டமிடல் திணைக்களம்
## செலவினத் தலைப்பு இலக்கம் 237

**உள்ளடக்கம்**


**அத்தியாயம் 01 - நிறுவனச் சுயவிவரம் / நிர்வாகச் சுருக்கம்**.....55
1.1. அறிமுகம் .....55
1.2. நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள் .....55
1.3. பிரதானமான செயற்பாடுகள் .....55
1.4. நிறுவன விளக்கப்படம் .....57
1.5. திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் .....58
1.6. திணைக்களத்தின் கீழ் உள்ள நிதியங்கள் .....58
1.7. வெளிநாட்டு உதவிகள் பெறப்படும் கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் .....58
**அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால மேற்பார்வை** .....59
2.1. பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி, சுற்றுலா, கைத்தொழில் மற்றும் வர்த்தகம் .....59
2.2. விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடைகள், மீன் பிடி, சுற்றாடல் மற்றும் இடர் முகாமைத்துவம் .....61
2.3. நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமானச் சேவை, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரிசக்தி , நீர் மற்றும் கழிவகற்றல் .....68
2.4. நகர அபிவிருத்தி, வீட்டுவசதி .....70
2.5. சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் விருத்தி, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், சமூகப் பாதுகாப்பு .....71
2.6. பொது முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம், கலாச்சார மற்றும் மத விவகாரங்கள் .....75
2.7. தொழிற்துறை .....76
2.8. இளைஞர், விளையாட்டு மற்றும் பிராந்திய அபிவிருத்தி .....77
2.9. பிராந்திய அபிவிருத்திப் பிரிவு .....78
2.10. உலக உணவு வேலைத் திட்டம் (WFP) .....80
**அத்தியாயம் 03 - 2021 மார்கழி 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய ஒட்டுமொத்த நிதிச் செயற்திறன்** .....88
3.1. நிதிச் செயற்றிறன் கூற்று .....88
3.2. நிதி நிலமைக் கூற்று .....90
3.3. காசுப் பாய்ச்சல் கூற்று ACA - C .....91
3.4. நிதிக் கூற்றிற்கான குறிப்பு .....93
3.5. வருமானம் சேகரிப்பின் செயற்றிறன் – பொருந்தாது .....93

3.6. ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயற்றிறன் ....93

3.7. நி.பி 208 இற்கு அமைவாக இந்த திணைக்களம் / மாவட்ட செயலகம் / ஏனைய அமைச்சுக்களிற்கு முகவராகிய மாகாண சபை / திணைக்களங்கள் என்பவற்றின் செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் ....94

3.8. நிதி அல்லாத சொத்துக்களின் செயற்றிறன் கூற்று ....94

3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ....95

**அத்தியாயம் 04 – செயற்றிறன் காட்டிகள்**....95

4.1. நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற் திட்டத்தின் அடிப்படையில்)....95

**அத்தியாயம் 05 - நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயற்திறன்**....95

5.1. இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக. ....95

5.2. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் உள்ள வெற்றிகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குக ....96

**அத்தியாயம் 06 - மனிதவள சுயவிவரம்**....96

6.1 நிரந்தர ஊழிய முகாமைத்துவம் ....96

6.2. ** நிறுவனத்தின் செயற்திறனில் மனித வளங்களில் குறைவு அல்லது அதிகரிப்பு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை சுருக்கமாக எடுத்துரைக்க....97

6.3. மனித வள அபிவிருத்தி....97

**அத்தியாயம் 07 - உடன்பாட்டறிக்கை** ....99

# அத்தியாயம் 01 - நிறுவனச் சுயவிவரம் / நிர்வாகச் சுருக்கம்

## 1.1. அறிமுகம்

தேசிய திட்டமிடல் திணைக்களம் 1956 ஆம் ஆண்டில் பிரதம அமைச்சரின் தலைமையின் கீழ் தேசிய திட்டமிடல் சபையாக நிறுவப்பட்டு முதன்முறையாக திட்டமிடல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையும் விதத்தில், முழுமையான நாட்டையும் உள்ளடக்கியவாறு விரிவான ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டமொன்றை முன்வைத்தது. 1961 ஆம் ஆண்டில் இச்சபை மேலும் பலப்படுத்தப்பட்டு பிரதம அமைச்சரின் அலுவலகத்தில் திட்டமிடல் திணைக்களமாக நிறுவப்பட்டது. இதன் கீழ், இத் திணைக்களம் ஒரு குறுகிய கால அபிவிருத்தி வேலைத் திட்டத்தைத் தயாரித்து, திட்டமிடல் செயற்பாட்டிற்காக உருட்டல் திட்ட (rolling plan) எண்ணக்கருவை முதல் முறையாக அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர் , 1965 ஆம் ஆண்டில் இத் திணைக்களம் திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டு மூலதன வரவு செலவுத் திட்டம் தயாரித்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்தல் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை போன்றன ஒப்படைக்கப்பட்டன. 1974 ஆம் ஆண்டில், தேசிய திட்டமிடல் திணைக்களம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது, அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த அரசாங்கங்கள் இதனை அவ்வப்போது நிதி, திட்டமிடல் மற்றும் கொள்கை அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சுக்களுடன் இணைத்திருந்தன. தற்போது, இலங்கையின் பிரதானமான அபிவிருத்தி ஆலோசகராகவும், வசதிகள் வழங்குநராகவும், நிதிப் பிராமண எண் 3 (2) மற்றும் எண் 35 ஆகியவற்றால் ஒதுக்கப்பட்ட அதிகாரத்திற்கு ஏற்ப திணைக்களம் அதன் செயற் பாடுகளைச் செயற்படுத்துகிறது

## 1.2. நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

**தூர நோக்கு**

தேசத்தின் மிகை திறனுடைய கொள்கை ஆலோசகராகவும் அபிவிருத்தியில் வசதியளிப்பவராகவும் இருத்தல்.

**பணிக்கூற்று**

நாட்டில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களினூடாக உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிறப்பான திட்டமிடல் அணுகுமுறைகளைப் பின்பற்றி கொள்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதில் உயர்ந்தபட்ச தொழில்வாண்மையைப் பேணும் வகையில் சர்வதேச தரத்திலான திட்டமிடல் திறன்களைத் தொடர்ச்சியாக மேம்படுத்துதல்

**நோக்கம்**

1. அரச முதலீடுகளை வினைத்திறனான முறையில் பயன்படுத்தல்.
2. குறித்த அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களில் பொது முதலீட்டின் மூலம் சமூக-பொருளாதார நன்மைகள் உயர்ந்த பட்சத்தில் காணப்படும் விதத்தில் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களை தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப வகுக்கத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குதல்.

## 1.3. பிரதானமான செயற்பாடுகள்

- தேசிய மற்றும் துறைசார் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுக்க பங்களிப்பை வழங்குதல்
- நடுத்தரக் கால பொது முதலீட்டுக் கட்டமைப்பை உருவாக்கி புதுப்பித்தல்
- கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல்

- அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகளை வழங்குதல்
- துறைசார் அணுகுமுறையை உருவாக்குவதற்கு தலைமைத்துவத்தை ஏற்றல்
- தேவைக்கேற்ப திட்டங்களைப் புதுப்பித்தல்
- தேசிய மற்றும் துணை தேசிய மட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு வழிகாட்டுதல்
- சிறப்பு / பிராந்திய வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்.
- தேசிய திட்டமிடல் செயல்முறையின் பிரதான ஓட்டத்தில் நிலைதகு அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்துதல்
- அபிவிருத்திப் பங்காளிகளுடன் அபிவிருத்தி தேவைகளை இனங்காண்பதற்கான வசதிகளை வழங்குதல்
- சிறப்புப் பணிகளில் பங்கேற்றல்
- வெளியிடும் துண்டுப்பிரசுரங்களை தயாரித்தல்
- திட்டமிடல் மற்றும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள தேசிய மற்றும் உள்ளூர் அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்தல்
- அரசாங்க கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப பரிந்துரைக்கப்பட்ட கருத் திட்டங்களை மதிப்பாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் (செயற்படுத்தப்படும் வரை)
- ஊழியர்களின் திறன் மேம்பாடு
- பொது நிர்வாகம் மற்றும் நிதி.

## 1.4. நிறுவன விளக்கப்படம்



## 1.5. திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

திணைக்களத்தின் செயற்பாடுகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்காக, திணைக்களமானது 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த 8 பிரிவுகளும் பொருளாதார மேம்பாட்டுத் துறையில் பல்வேறு பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் துணைத் துறைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் அவை பிரதிநிதித்துவப்படுத்தும் துறைகளுடன் தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கூடாக மேற்கொள்ளப்படும் அந்தந்த பிரிவுகளின் கொள்கை வகுத்தல் மற்றும் ஏனைய அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகக் காணப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக , பேரண்டப் பொருளாதார திட்டமிடல், தகவல்களை வழங்குதல் மற்றும் திணைக்களத்தின் நிர்வாகம் ஆகிய நடவடிக்கைகளிற்காக தனியான மூன்று ஆதரவு அலகுகள் உள்ளன.

1. தகவல் மேம்பாட்டு மையம்
2. நிர்வாகப் பிரிவு
3. நிதிப் பிரிவு

**திணைக்களத்தின் பிரிவுகள்**

- பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி, சுற்றுலா, கைத்தொழில் மற்றும் வர்த்தகம்
- விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடைகள், மீன் பிடி, சுற்றாடல் மற்றும் இடர் முகாமைத்துவம்
- நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமானச் சேவை, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரிசக்தி , நீர் மற்றும் கழிவகற்றல்
- நகர அபிவிருத்தி, வீட்டுவசதி
- சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் விருத்தி, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், சமூகப் பாதுகாப்பு
- பொது முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம், கலாச்சார மற்றும் மத விவகாரங்கள்
- தொழிற்துறை
- இளைஞர், விளையாட்டு மற்றும் பிராந்திய அபிவிருத்தி
- பிராந்திய அபிவிருத்திப் பிரிவு
- உலக உணவுத் திட்டம்

## 1.6. திணைக்களத்தின் கீழ் உள்ள நிதியங்கள்

## 1.7. வெளிநாட்டு உதவிகள் பெறப்படும் கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள்

1. கருத்திட்டத்தின் பெயர்: உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படும் முதலீட்டுக் கருத்திட்டங்களின் அவசர பதிலளிப்பு
2. நன்கொடை வழங்குகின்ற நிறுவனம்: உலக வங்கி
3. கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு - ரூ. மில்லியன் 10,491
4. கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலம்: 2020.09.30 – 2022.12.30

1. கருத்திட்டத்தின் பெயர்: Promoting Autonomy, Literacy and Attentiveness through Market Alliances (PALAM/A)
2. நன்கொடை வழங்குகின்ற நிறுவனம்: ஐக்கிய அமெரிக்க விவசாய திணைக்களம் மற்றும் இலங்கை அரச நிதி

3. கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு: அமெரிக்க டொலர் மில்லியன்26 மற்றும் ரூ. மில்லியன் 140
4. கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலம் : 2021 - 2024

1. கருத்திட்டத்தின் பெயர்: உலக உணவுத் திட்டம்
2. நன்கொடை வழங்குகின்ற நிறுவனம்: உலக உணவு வேலைத்திட்டம் (WFP)
3. கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு - ரூ. மில்லியன் 46.5
4. கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலம்: 2018-2022

# அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால மேற்பார்வை

## 2.1. பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி, சுற்றுலா, கைத்தொழில் மற்றும் வர்த்தகம்

**பேரண்டப் பொருளாதாரப் பிரிவு**

இத் திணைக்களத்திலுள்ள பேரண்டப் பொருளாதாரப் பிரிவானது ஏனைய அனைத்து அபிவிருத்தித் துறைகளையும் ஒரு ஒட்டுமொத்த கொள்கை கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைத்து, நாட்டின் பொதுவான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி அவர்களை வழிநடத்தும் பிரிவாகும். இப்பிரிவினூடாக உள் நட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதாரங்களை ஆய்வுகளை மேற்கொள்வதுடன், உள் நாட்டு பொருளாதாரத்தில் உள்ள வாய்ப்புக்கள் மற்றும் சவால்களை இனங்காண்பதுடன், தற்போது காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட வள அபிவிருத்தி செயற்பாட்டு நடவடிக்கைகளை திறனான முறையில் வழிநடத்துகிறது. மேலும், இப் பிரிவினால் பொது முதலீட்டு முகாமைத்துவ நோக்கத்திற்காக காணப்படுகின்ற நிதி வளங்களை தேசிய முன்னுரிமைத் துறைகளிற்கு ஒதுக்குவதன் மூலம் பொது முதலீட்டு வேலைத்திட்டம் முறைப்படுத்தப்படுகிறது. அதன் பிரகாரம், பேரண்டப் பொருளாதாரத் துறையினால் மேற்கொள்ளபப்டுகின்ற செயற்பாடுகள் பின்வருமாறு.

- 2021 - 2024 பொது முதலீட்டு திட்டத்தின் அத்தியாயங்களைத் தயாரிக்க ஏனைய அபிவிருத்தித் துறைகளுக்கு உதவுதல்
- 2021 - 2024 பொது முதலீட்டுத் திட்டத்தைத் தொகுத்து தேசிய ஆவணமாக வெளியிடுதல்.
- பேரண்டப் பொருளாதாரப் போக்குகளை ஆய்வு செய்து இலங்கைப் பொருளாதாரத்தில் உள்ள வாய்ப்புக்கள் மற்றும் சவால்களை பகுப்பாய்வு செய்தல்.

**கைத்தொழில் பிரிவு**

இலங்கையின் கைத்தொழில் துறையானது பாரிய அளவிலான நிறுவனங்கள், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs) மற்றும் சுயதொழில் நடவடிக்கைகளில் முதன்மையாக ஈடுபட்டுள்ள பல நுண் நிறுவனங்களால் ஆனது. இந்தத் துறையானது தொடர்ச்சியாக நாட்டின் தேசியப் பொருளாதாரத்தின் குறிப்பிடத்தக்க பகுதியின் மீது அவதானம் செலுத்தியுள்ளதுடன், மொத்த தேசிய உற்பத்தியில் அண்ணளவாக 26 சதவீதமாகவும், மொத்த வேலைவாய்ப்பில் 28 சதவீதமாகவும், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் அண்ணளவாக 84 சதவீதமாகவும் பங்களிப்பு வழங்குகின்றன.

கொவிட்-19 தொற்றுநோயின் பரவல் காரணமாக, நாட்டின் விவசாயம் மற்றும் சேவைத் துறைகளிற்கு சமனாக கடந்த இரண்டு ஆண்டுகளினுள் நாட்டின் கைத்தொழில் துறையின் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க பின்னடைவு அவதானிக்கப்படுவதுடன், 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் தொழில்துறை உற்பத்தியானது 6.9 சதவீத

பின்னடைவையும் 2020, நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021, நவம்பர் மாதம் 3.5 சதவீத பின்னடைவையும் பதிவு செய்துள்ளன இப் பின்னணியில், அரசாங்கத்தின் நிகழ் கால கொள்கையினூடாக பாதகமான புறச்சூழலினுள், சரிவடைந்துச் செல்லும் தொழில்துறை உற்பத்தியை மறுசீரமைத்து, நாட்டின் தொழிற்சாலை அபிவிருத்திக்கு வழி காட்டுவதற்கான உரிய நடவடிக்கைகளின் அவசியத்தை வலியுறுத்துகிறது. அதே நேரத்தில், 2021 ஆம் ஆண்டினுள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- 46 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து, தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களம், வெளி நாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய பிரதான நிறுவனங்களுக்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- கைத்தொழில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 8 அமைச்சரவைப் பத்திரங்களிற்கு குறித்த அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- தொழில்துறைக்கு தொடர்புடைய தகவல் மற்றும் தரவுகளை வழங்குவதன் மூலம் 2021-2024 பொது முதலீட்டுத் திட்டத்தை உருவாக்குவதற்கு உதவுதல்.
- கைத்தொழில் அமைச்சகம் மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள் சமர்ப்பித்த புதிய கருத் திட்ட முன்மொழிவுகளுடன் திட்ட சீரமைப்புக்களைப் (Project Pipeline) புதுப்பித்தல்.
- நாட்டின் அபிவிருத்தி கட்டமைப்பிற்கு ஏற்ப பொருத்தமான கருத்திட்டங்களை உருவாக்க தொடர்புடைய மத்திய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தேவையான ஆலோசனை உதவிகளை வழங்குதல்.
- இலங்கையில் தொழில்துறை மேம்பாட்டுக்கான தேசிய கொள்கையை வகுப்பது தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களில் கலந்து கொண்டு தேவையான ஆலோசனை உதவிகளை வழங்குதல்
- வழிநடத்தல் குழுக்கள், முன்னேற்ற ஆய்வு மற்றும் வெளி நாட்டுப் பணிகள் (Foreign Mission) உள்ளிட்ட கூட்டங்களில் செயற்பாட்டு ரீதியாக பங்கேற்றமை.
- இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையை உருவாக்குதல் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தொழில்துறை ஊக்குவிப்புச் சட்டத்தின் திருத்தம் தொடர்பாக கைத்தொழில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு ஆவணங்களை மீளாய்வு செய்து தேவையான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கியமை.

**வர்த்தகப் பிரிவு**

தேசிய அபிவிருத்திக் கொள்கையின் பிரகாரம், வர்த்தகப் பிரிவினால் வர்த்தகர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோரின் வர்த்தக உரிமைகளை உறுதி செய்வதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகங்களிற்கான வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக குறிப்பாக சர்வதேச வர்த்தகத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதோடு 2021 ஆம் ஆண்டு வர்த்தகத் துறைக்கு மிகவும் சவாலான ஆண்டாக காணப்பட்டது. எனவே, இந்த பின்னடைவை போக்க, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் இ-வர்த்தகம் அடிப்படையிலான தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் ஏற்றுமதியை பல்வகைப்படுத்துதல் மற்றும் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. அதே நேரத்தில், 2021 ஆம் ஆண்டினுள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- வர்த்தக அமைச்சினால் முன்வைக்கப்பட்ட 3 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகளை வழங்கியமை.

- கருத்திட்டங்களை அமுல்படுத்தல் தொடர்பாக அரசாங்க முன்னுரிமைகள் மற்றும் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடுகளைக் கருத்திற் கொண்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட 17 கருத்திட்ட முன்மொழிவுகளில் 11 கருத்திட்ட முன்மொழிவுகலிற்கான மதிப்பீடுகளை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தல்.
- எதிர்காலத்தில் செயல்படுத்தப்படும் திட்ட சீரமைப்புக்களைப் (Project Pipelines) புதுப்பித்தல்.
- வர்த்தக அமைச்சு மற்றும் கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளை முன்னுரிமைப்படுத்தி 2022 வரவு செலவு திட்ட மதிப்பீட்டை தயாரிப்பதில் பங்களிப்பு வழங்கியமை.
- வர்த்தகப் பிரிவு தொடர்பான அபிவிருத்தி முன்னுரிமைகள், வர்த்தகத் துறை எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் சவால்கள், பிரதானமான தந்திரோபாயங்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை இனங்கண்டு 2021-2024 பொது முதலீட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதில் பங்களிப்பு வழங்கியமை.

**சுற்றுலாப் பிரிவு**

அந்நியச் செலாவணியை உழைப்பதில் பொருளாதாரத்தின் பிரதானமான துறைகளில் ஒன்றாக சுற்றுலாத் துறையானது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பரந்த சமூகப் பங்களிப்புடன் சுற்றாடல் மற்றும் உள்நாட்டு கலாசாரத்துக்கும் உகந்த தொழிற்சாலையாக, சுற்றுலாத் துறையை அபிவிருத்தியடையச் செய்தல் அரசின் கொள்கையாகும். 2025 ஆம் ஆண்டில், சுற்றுலாத் துறையின் வருமானத்தை 10 பில்லியன் டொலராக அதிகரித்தல், சுற்றுலாப் பயணிகளின் வருகையை 7 மில்லியனாக அதிகரித்தல், தற்போதுள்ள ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக அதிகரித்தல் மற்றும் சுற்றுலாத் துறையில் ஊழியர்களின் எண்ணிக்கையை 1 மில்லியனாக அதிகரித்தல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

சுற்றுலா அமைச்சுடன் இணைந்து கொள்கைகள் உருவாக்குவதில் பங்களிப்பு வழங்கல், கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல், அமைச்சரவைப் பத்திரங்களை பரிசீலித்து அவற்றுக்கான அவதானிப்புகளை வழங்குதல் என்பன இத்திணைக்களத்தின் முக்கிய பங்களிப்புக்களாகும். அதே நேரத்தில், 2021 ஆம் ஆண்டினுள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- 12கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து, தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களம், வெளி நாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய பிரதான நிறுவனங்களுக்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- சுற்றுலா அமைச்சினால் முன்வைக்கப்பட்ட 3 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகளை வழங்கியமை.
- சுற்றுலாத் துறைக்கு தொடர்புடைய தகவல் மற்றும் தரவுகளை வழங்குவதன் மூலம் 2021-2024 பொது முதலீட்டுத் திட்டத்தை உருவாக்குவதற்கு உதவுதல்.
- தேசிய சுற்றுலாக் கொள்கை வரைவுக்கான பரிந்துரைகள் மற்றும் அவதானிப்புக்களை வழங்குதல்.

## 2.2. விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடைகள், மீன் பிடி, சுற்றாடல் மற்றும் இடர் முகாமைத்துவம்

**விவசாயப் பிரிவு**

விவசாயத் துறை நாட்டின் சனத் தொகையில் 1/4 இற்கும் அதிகமானோரின் பிரதானமான வாழ்வாதாரமாக அமைவதுடன், குறிப்பாக கிராமியப் பிரதேச தொழிலாளர்களில்

அண்ணளவாக அரைப் பகுதியினரின் பிரதானமான வாழ்வாதாரமாக காணப்படுகின்றது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 36% விவசாயத்திற்காக பயன்படுத்தப்படுவதுடன் அதன் பெரும்பான்மையான பகுதி பெரும்பான்மையான (40% க்கு அதிகமான) நிலையான பெருந்தோட்ட பயிர்செய்கைகளிற்கும் 32% நெற்பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்தப்படுகிறது.

2020 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த இறக்குமதியில் 9.7% உணவு மற்றும் பானங்கள் ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக, உள்நாட்டில் விளையும் சில உணவுப் பயிர்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தற்காலிகக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. உள்நாட்டில் பெற்றுக்கொள்ள முடியுமான மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சேதன விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம் பசுமை விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம் பசுமை விவசாய உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் தனது கொள்கை வழிகாட்டலை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அதன் பிரகாரம் தேவையான விநியோக வசதிகள், மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சேதனப் பசளை மற்றும் பிற சேதன உற்பத்திகளிற்கான தர உறுதிப்படுத்தல்களிற்கான விஷேட தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயம் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையில் உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கைத் தர விருத்தியை உறுதி செய்தல், சர்வதேச சந்தையில் போட்டித்தன்மை கொண்ட தொழில்நுட்பத்தின் அடிப்படையில் திறனான, நிலையான மற்றும் அதிக இலாபம் தரும் விவசாயத்தை உருவாக்குதல் என்பன பிரதானமாக கவனம் செலுத்தபட்டுள்ளன.

**பயிர்ச் விவசாயம்**

பயிர்ச் விவசாயத்தில் நெல், காய்கறிகள், பிற விவசாயப் பயிர்கள், பழங்கள், வாசனைத் திரவியங்கள், மலர் வளர்ப்பு மற்றும் அலங்கார இலைகள் உள்ளிட்ட ஏற்றுமதி விவசாய பயிர்கள் காணப்படுகின்றன. பயிர் விவசாய உற்பத்தியுடன், அதன் ஏற்றுமதியின் போட்டித்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் வலுவூட்டுவதற்காக அரசாங்கம் பல்வேறு படிமுறைகளை மேற்கொண்டுள்ளது. பிற விவசாயப் பயிர்கள் (OFC); சோளம், உருளைக்கிழங்கு, வெங்காயம், முந்திரி, மிளகாய், சோளம் (எள்), பச்சை பட்டாணி, தினை மற்றும் சோயாபீன்ஸ் என்பன பெரும் போகம், சிறு போகம் என்பவற்றில் உற்பத்தி செய்யப்படும் நிலையான பயிர்கள் ஆகும். பிற விவசாயப் பயிர்கள் (OFC) பிரதானமாக சிறு விவசாயிகளால் பயிரிடப்படுகிறது மற்றும் வீட்டுத் தோட்டங்களும் பிற விவசாயப் பயிர்களை (OFC) வழங்குவதற்கான ஒரு முக்கிய ஆதாரமாகும். உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதற்கு உள்நாட்டு உற்பத்தி போதுமானதாக காணப்படாமை மற்றும் நிகழ் காலத்தில் காணப்படும் விநியோக பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக பல பயிர் நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்படுகின்றன. அதன் பிரகாரம், இறக்குமதிக்கு பதிலாக பிற விவசாயப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்திக்காக அரசாங்கம் வழங்கியுள்ள பங்களிப்பை மேலும் பலப்படுத்தியுள்ளது.

விவசாயம், அறுவடை செய்தல், அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவம், மதிப்புச் சேர்க்கை மற்றும் சந்தைப்படுத்தற் துறைகளில் தொழில்நுட்பப் பயன்பாடு, கருத்திட்டச் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் விவசாய மதிப்புச் சங்கிலியில் உள்ள இடைவெளிகளைக் குறைத்தல் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தப்பட்டது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நிறைவு செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

- 35 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புகள் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் மற்றும் வெளி நாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- விவசாய அமைச்சு மற்றும் தொடர்புடைய இராஜாங்க அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 14 அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பில் அவதானிப்பு மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

**விசேட செயற்பாடுகள்:**

- மேலோட்டமான விவசாயக் கொள்கையை (Overarching Agriculture Policy) உருவாக்கியமை (அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறல் வேண்டும்).
- "உணவுத் தேவை, நுகர்வு மற்றும் கிடைப்பனவு" தொடர்பான ஆய்வு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி, விவசாய அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின் உதவியுடன் நடைபெற்றது.
- உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக “Livelihood Resilience in Agriculture and Tourism Development” என்ற தலைப்பில் கருத்திட்டக் கருத்துரு தயாரிக்கப்பட்டது..
- உலக வங்கியின் நிதியுதவியுடன் செயற்படுத்துவதற்கு காணப்படுகின்ற "ஒருங்கிணைந்த கிராமிய வாழ்வாதார வேலைத் திட்டத்திற்கு" (Integrated Rural Livelihoods Transformation Project) உட்படுத்துவதற்கு,“Inclusive Development in Agriculture towards a prosperous farming community” தொடர்பான கருத்திட்டக் கருத்துரு தயாரிக்கப்பட்டது.
- கருவாவிற்கான GI (புவியியல் குறியீடு) பெறுவதற்கும் GI சட்டத்தை அங்கீகரிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- விவசாய இயந்திரங்களுக்கான இந்திய கடன் வசதிகளைப் பெறுவதற்கான கருத்திட்டக் கருத்துருவைத் தயாரிப்பதிற்கான பங்களிப்பை வழங்கியது.
- சீன அரசின் நிதியுதவியுடன் "சேதனப் பசளை அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்பு" மற்றும் "கலப்பின வகை மேம்பாடு" ஆகிய தொடர்பாக இரண்டு கருத்திட்டக் கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டன.
- "விவசாயத்திற்கான டிஜிட்டல் உட்கட்டமைப்பு முகாமைத்துவத் தொகுதி" பற்றிய விரிவான கருத்திட்ட முன்மொழிவு குறித்த தரப்பினருடன் இணைந்து தயாரிக்கப்பட்டு, TAMAP II கருத் திட்டத்தின் கீழ் உதவிக்காக ஐரோப்பிய ஒன்றியத்திடம் (EU) சமர்ப்பிக்கப்பட்டது.

**கால்நடைப் பிரிவு**

கால்நடைப் பிரிவானது, குறிப்பாக நாட்டின் கிராமப்புறங்களில் சுமார் 1.6 மில்லியன் மக்களின் ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு பங்களிக்கும் ஒரு முக்கிய துணைப் பிரிவாகும். மொத்தத் தேசிய உற்பத்தியில் 1%க்கும் குறைவான பங்களிப்பை வழங்கப்பட்டிருப்பினும், அந்தத் துறைக்கான தொழிலாளர் தேவையின் கிராமிய வேலைவாய்ப்பு உருவாக்கம், வறுமையை நீக்குதல், மற்றும் அதன் பிரகாரம் பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்கும் முக்கிய துறைகளில் இதுவும் ஒன்றாகும். இப் பிரிவில் பிரதானமாக கால்நடைகள், எருமைகள், ஆடுகள், கோழிகள் மற்றும் பன்றிகள் அடங்கும். இவற்றில் திரவ பால் மற்றும் கோழி வளர்ப்பு பிரதான அபிவிருத்திப் பகுதிகளாகும். நாட்டில் சுமார் 600,000 பதிவுசெய்யப்பட்ட விலங்கு பண்ணைகள் காணப்படுவதுடன், அவற்றில் 80% க்கும் அதிகமான பண்ணைகள் பயனற்ற அல்லது குறு நிலங்களில் செயலற்ற தொழிலாளர்களால் இயக்கப்படுகின்றன. 250,000 பால் பண்ணையாளர்கள் உட்பட சுமார் 600,000 குடும்ப அலகுகள் இத் துறையில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர்.

இதுவரையில் உள்நாட்டு திரவ பால் உற்பத்தி அண்ணளவாக 427 மில்லியன் லிட்டராக காணப்படுவதுடன், இது நாட்டின் மொத்த தேவையில் 50 சதவீதத்தை பூர்த்தி செய்ய போதுமானது. எனவே, உற்பத்தியை அதிகரிப்பதற்கு மற்றும் உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒருங்கிணைந்த வணிகமயமாக்கப்பட்ட விவசாயத்திற்கு மாற்றம் ஒன்று இத்துறைக்கு அவசியமானது. இதற்கு உள்நாட்டு மற்றும் கலப்பின இனங்களைப் பயன்படுத்தி வெற்றிகரமான இனப்பெருக்க முறைகளுக்கு பரந்த அணுகுமுறை தேவைப்படுகிறது.

கோழிப்பண்ணை தொழிற்சாலைகள் முற்றிலும் தனியார் துறையினரால் நிர்வகிக்கப்படுவதுடன் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளிற்கான உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்ய முடியுமாக காணப்படுகிறது. பொதுவாக கோழிகளின் சுகாதார முகாமைத்துவ வேலைத்திட்டங்களை செயற்படுத்தல், துறையை மென்மேலும் வலுப்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் கொள்கை அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளினுடன் மாத்திரம் அரசாங்கத்தின் பங்களிப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. கோழி இறைச்சி மற்றும் முட்டைகள் மலிவான விலங்கு புரத ஆதாரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், நாட்டின் விலங்கு புரதத் தேவையைப் பூர்த்தி செய்ய உற்பத்தி செலவைக் குறைப்பது மற்றும் உற்பத்தியை அதிகரிப்பது அவசியம். ஆசிய பிராந்தியத்தில் பறவைக் காய்ச்சல் அற்ற நாடாக, ஏற்றுமதி சந்தையில் போட்டியிடும் திறன் இத் தொழிலுக்கு உள்ளது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நிறைவு செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

- 10 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புகள் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் மற்றும் வெளி நாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- கால் நடைப் பிரிவுடன் தொடர்புடைய சமர்ப்பிக்கப்பட்ட 6 அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பில் அவதானிப்பு மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

**நீர்ப்பாசனம் மற்றும் காணி**

2021ஆம் ஆண்டில் நீர்ப்பாசனத் துறைக்கான அரசின் மொத்தச் செலவு ரூ. 50.7 பில்லியன் ஆகக் காணப்படுவதுடன் அந்த தொகையில் ரூ.46.8 பில்லியன் மூலதனச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டது. நீர்வள அபிவிருத்தியின் கீழ் தற்போது மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்திக் கருத் திட்டம், தெதுரு ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம், உமா ஓயா நீர்த் திசைதிருப்பல் கருத்திட்டம், களுகல் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம், யான் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம், பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் இறுதிக் கட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டு காணப்படுகின்றன. நீர்வள அபிவிருத்தியின் கீழ் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டம், மொரண நீர்த்தேக்கக் கருத்திட்டம், மல்வத்துஓய நீர்த்தேக்கக் கருத்திட்டம், தல்பிட்டிகல நீர்த்தேக்கக் கருத்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நீர் மற்றும் நீர்வள முகாமைத்துவத் திட்டம் (IW & WRMP) போன்ற பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றன. அதே நேரத்தில், நீர்ப்பாசன மறுசீரமைப்பு கருத் திட்டங்களினூடாக விவசாயம் மற்றும் பிற நீர் தேவைகளுக்கு நீர் வழங்குவதை செயற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன.

2021ல் காணித் துறையின் மொத்தச் செலவு ரூ. 9,471 மில்லியன் ஆகக் காணப்படுவதுடன் இதில் ரூ. 3,276 மில்லியன் மூலதனச் செலவு ஆகும். 2021 இல் காணி உரிமைத் திட்டத்திற்கு (பிம்சவியா) ரூ. 239 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. 2021ல் ரூ. 1,957 மில்லியன் ரூபா செலவில் அரசாங்க அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக காணிகள் இனங்காணப்பட்டு சுவீகரிக்கப்பட்டுள்ளன.

**விசேட செயற்பாடுகள்**

- பொது முதலீட்டுத் திட்டம் - (2021 - 2024) நிலம் மற்றும் நீர்ப்பாசனத் துறை பற்றிய அத்தியாயத்தைத் தயாரித்தல்
- JICA நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக வடமத்திய மாகாணக் கால்வாயில் தற்போதுள்ள இடைநீக்க அமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான கருத்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகளிற்கு வெளி நாட்டு வள திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- பருவநிலை மாற்றத்தின் காரணமாக விவசாயத் துறையில் தாக்கம் பற்றிய கருத்துருவை தயாரிப்பதற்குத் தேவையான பங்களிப்பை வழங்குதல்.
- சீனா அரசாங்கத்தின் உதவிகள் பெற்றுக் கொள்கின்ற நோக்கில் மகாவலி வலையத்திற்கு அண்மித்த பகுதிகளில் சிறு நீர்ப்பாசன கைத்தொழில் அபிவிருத்தி கருத்திட்ட அறிக்கையை தயாரித்து வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.
- விவசாயம் தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்குகளை அளவிடுவதற்கு தேவையான குறிகாட்டிகளின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால இலக்குகளின் பகுப்பாய்வுகளிற்கான பங்களிப்பு வழங்கியமை.
- உலக வங்கியின் உதவியை பெறும் நோக்கில் தயாரிக்கப்பட்ட 'வளர்ச்சிமிக்க விவசாயி சமூகத்தை நோக்கி விவசாயத்தின் அபிவிருத்தி' என்ற கருத்திட்ட அறிக்கையில் உள்ள 'நீர்ப்பாசனத் திறனை விருத்தி செய்தல் மற்றும் எல்லாங்கா அமைப்புகளின் மேம்பாடு' என்ற தலைப்பிலான அத்தியாயத்தின் தயாரிப்பு
- நீர்ப்பாசனத் துறை திட்டங்களின் செலவுத் திறன் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை அதிகப்படுத்துவதற்காக மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்தின் (MWSIP) இரண்டாம் கட்ட சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் காலி மாவட்ட வெள்ள முகாமைத்துவ கருத்திட்டத்தின் ஆரம்ப ஆய்வுக்காக அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசேட குழுக்களின் உறுப்பினராகக் காணப்பட்டமை .

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நிறைவு செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் காணிப் பிரிவுகளிற்குரிய நடவடிக்கைகள்**

1. நீர்ப்பாசனம் மற்றும் காணிப் பிரிவுகளிற்குரிய 17 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புகள் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் மற்றும் வெளி நாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
2. நீர்ப்பாசன அமைச்சு மற்றும் காணி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 32 அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பான அவதானிப்புகளைத் தயாரித்தல்.
3. மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்திக் கருத்திட்டம், மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டம், ஒருங்கிணைந்த நீர் மற்றும் நீர்வள முகாமைத்துவத் திட்டம் (IW & WRMP) மற்றும் தல்பிட்டிகல நீர்த்தேக்கக் கருத்திட்டம் மற்றும் ஏனைய அபிவிருத்திக் கருத்திட்டங்களின் வழிநடத்தல் குழுக் கூட்டங்களுக்கு செயற்பாட்டு ரீதியில் பங்களிப்புக்களை வழங்கியமை.
4. தற்போது நடைமுறையில் காணப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் கொள்கை மறுஆய்வு கூட்டங்களில் செயற்பாட்டு ரீதியில் பங்கேற்றமை.
5. நீர்ப்பாசனம் மற்றும் காணித் துறை தொடர்பான தகவல்களை வழங்குவதன் மூலம் பொது முதலீட்டுத் திட்டத்தை புதுப்பித்தல்.

**பெருந்தோட்டப் பிரிவு**

பெருந்தோட்டத் துறையின் பிரதான அமைச்சாகிய, பெருந்தோட்ட அமைச்சு மற்றும் தொடர்புடைய மூன்று இராஜாங்க அமைச்சுக்களுக்குத் தேவையான துறைசார் கொள்கை விடயங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் மற்றும் அந்த அமைச்சுக்கள் மற்றும் அமைச்சுக்கள் வழங்கும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான கருத்திட்ட பகுப்பாய்வு, பரிந்துரைகள் மற்றும் செயற்திட்டங்களை வழங்குதல் என்பன இத்துறையின் பிரதான செயற்பாடுகள் ஆகும்.

நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் பெருந்தோட்டத்துறை சுமார் 27 சதவீத பங்களிப்பை வழங்குகிறது. சுமார் 1.5 மில்லியன் மக்கள் பெருந்தோட்டத் துறையில் வாழ்வாதாரத்தைக் கொண்டுள்ளனர். பெருந்தோட்டத்துறையின் உற்பத்தியையும் உற்பத்தித்திறனையும் அதிகரித்து பெருந்தோட்டத் துறையில் வாழ்வாதாரம் தங்கியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் அரசாங்க கொள்கைகளுக்கு அமைவாக பெருந்தோட்ட கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பங்களிப்புக்களையும் தொழில்நுட்ப உதவிகளையும் இத்துறை வழங்குகிறது.

**விசேட செயற்பாடுகள்**

- 2020 - 2024 இடைக்கால பொது முதலீட்டுத் திட்டத்தின் பெருந்தோட்டத் துறைக்கான அத்தியாயத்தை தயாரித்தல் மற்றும் நிறைவு செய்தல்.
- USAID மற்றும் உலக வங்கி உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக கருத்திட்ட அறிக்கைகள் தயாரித்தல்.
- கருத்திட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்தல் தொடர்பாக அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களுடன் 5 கூட்டங்களை ஏற்பாடு செய்து நிகழ்த்தியமை.
- Aid Memorie, Country Diagnosis Studies (CDS) என்பவற்றுக்குத் தேவையான அவதானிப்புக்களை வழங்குதல்.
- வழிநடத்தல் குழு கூட்டங்களுக்கு பங்களிப்பு.
- விவசாயத் துறையில் பருவநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்த கருத்துரு தயாரித்தல்

முன்னேற்றம் 2021

| | |
|---|---|
| பெறப்பட்ட கருத்திட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 58 |
| மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 58 |
| பெறப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்களின் எண்ணிக்கை | 05 |
| அவதானிப்புக்கள் வழங்கிய அமைச்சரவைப் பத்திரங்களின் எண்ணிக்கை | 05 |

**மீன் பிடித்துறை**

மீன்பிடித்துறையின் பிரதான அமைச்சாகிய, கடற்றொழில் அமைச்சு மற்றும் மீன்பிடிப் பிரிவு தொடர்பான இராஜாங்க அமைச்சுக்களுக்குத் தேவையான துறைசார் கொள்கை விவகாரங்களிற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் மற்றும் அந்த அமைச்சுக்கள் மற்றும் அமைச்சுக்களின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான கருத்திட்ட பகுப்பாய்வு, பரிந்துரைகள் வழங்குவதுடன் மற்றும் கருத்திட்டத் திட்டமிடலிற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் இந்தப் பிரிவின் பிரதான செயற்பாடுகள் ஆகும்

நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் மீன்பிடித் துறை 1 சதவீத பங்களிப்பை வழங்குகிறது. மீன்பிடித் துறையை வாழ்வாதாரமாகக் கொண்டு அண்ணளவாக 2.8 மில்லியன் மக்கள் காணப்படுகின்றனர். மீன்பிடித் துறையின் உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை அதிகரிப்பதன் மூலம் மீன்பிடித் துறையுடன் தொடர்புடைய மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும், அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்ப மீன்பிடிக் கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பங்களிப்பு மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கல் என்பன இப் பிரிவினால் நிகழ்கிறது.

**விசேட செயற்பாடுகள்**

- 2020 - 2024 இடைக்கால பொது முதலீட்டுத் திட்டத்தின் மீன் பிடித்துறைக்கான அத்தியாயத்தை தயாரித்தல் மற்றும் நிறைவு செய்தல்.
- வடமாகாண நிலையான மீன்பிடி அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒருங்கிணைப்புப் பங்களிப்பு.
- USAID மற்றும் உலக வங்கி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக கருத்திட்ட அறிக்கையைத் தயாரித்தல்.
- கருத்திட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்வது தொடர்பாக அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களுடன் 6 கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் நிகழ்த்தல்.
- Aid Memorie, Country Diagnosis Studies (CDS) என்பவற்றுக்குத் தேவையான அவதானிப்புக்களை வழங்குதல்.
- முன்னேற்றம் 2021

| | |
|---|---|
| பெறப்பட்ட கருத்திட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 21 |
| மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 21 |
| பெறப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்களின் எண்ணிக்கை | 05 |
| அவதானிப்புக்கள் வழங்கிய அமைச்சரவைப் பத்திரங்களின் எண்ணிக்கை | 05 |

**சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவம்**

சுற்றாடல் தரத்தை உறுதி செய்வதுடன் நிலையான அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம், வலுவான பொருளாதார விருத்தியை அணுகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தல் சுற்றாடல் முகாமைத்துவத்தால் நிகழ்கிறது. சமநிலையான சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் நடைமுறைகள் மூலம் நிலையான அபிவிருத்தியை அடைவதற்கு சுற்றாடல் முகாமைத்துவம் இன்றியமையாதது ஆகும். மாசற்ற சூழலையும் நச்சுத்தன்மையற்ற உணவையும் உறுதி செய்வதற்கான சூழல் கொள்கையில் பசுமை அபிவிருத்தி என்ற கருத்து முக்கிய பங்கை வகிப்பதுடன், குறைந்த காபன் நுகர்வுடன், பரிசுத்தமான பசுமையான சூழலை அடைதல், சூழல் மாசடைதலைக் குறைத்தல், உயர் உயிர் பல்வகைமை மற்றும் சுற்றாடல் தொகுதி சேவைகள், சூழல் அபாயத்தைக் குறைத்தல், திறமையான மற்றும் நிலையான வள நுகர்வு மூலம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், சுற்றாடல் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் இயற்கை அழிவுகளின் தாக்கத்தைக் குறைத்தல் என்பவற்றுடன் சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவின் கவனம் செலுத்தப்படுகிறது.

அவ்வாறே இலங்கையில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற சத்தியம் அதிகமாகக் காணப்படுவதுடன் அது மனித உயிர்கள் மற்றும் சொத்துக்களுக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைகிறது. மேலும், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக மனித வளங்கள் நேரடியான பங்களிப்பை வழங்குவதால், நாட்டு மக்களை பேரழிவுகளில் இருந்து பாதுகாப்பது மிகவும் முக்கியமான காரணியாக அமைகிறது. எனவே, நாட்டில் இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகளால் ஏற்படும் அனர்த்தங்களைத் திறனான முறையில் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவதனூடாக அவர்களின் வாழ்க்கையின் ஒற்றுமை, செழிப்பு மற்றும் கண்ணியத்தை எளிதாக்குவதன் மூலம் சமூகத்தைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் நிலையான மற்றும் சடுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**விசேட செயற்பாடுகள்**

- சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவுடன் தொடர்புடைய அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 30 கருத்திட்டமுன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.
- பிரதான அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 23 அமைச்சரவைப் பத்திரங்கள் மீதான அவதானிப்புக்களை வழங்கியமை.
- 2020 - 2024 இடைக்கால பொது முதலீட்டுத் திட்டத்தின் சுற்றாடல் முகாமைத்துவத் துறைக்கான அத்தியாயத்தை தயாரித்தல் மற்றும் நிறைவு செய்தல்.
- கொள்கைகள் மற்றும் உத்திகளை உருவாக்குவதற்கு தொடர்புடைய பிரதான அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப பங்களிப்புக்கள் வழங்கப்பட்டமை.

## 2.3. நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமானச் சேவை, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரிசக்தி , நீர் மற்றும் கழிவகற்றல்

**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமானச் சேவை மற்றும் நீர் விநியோகம்**

நாட்டினுள்ளேயும் வெளியேயும் வினைத்திறனான பயணிகள் மற்றும் பொருட்களின் போக்குவரத்திற்காக வசதிகளை ஏற்படுத்தல் போக்குவரத்துத் துறையின் பிரதானமான செயற்பாடு ஆகும். அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி, நெடுஞ்சாலை விரிவாக்கம் மற்றும் மறுசீரமைப்பு, நெடுஞ்சாலை பராமரிப்பு மற்றும் பாலம் நிர்மாணம், நவீனமயமாக்கல் மூலம் பொதுப் போக்குவரத்தை விருத்தி செய்தல், நகர - கிராமிய இணைப்பை விருத்தி செய்தல், நகர்ப்புறப் போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், வீதி விபத்துக்களைக் குறைத்தல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை விரிவுபடுத்துதல் போன்ற நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்காக முதலீடுகளை மேற்கொள்ளல். உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வசதிகள் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாகும். மேலதிகமாக, நீர் வழங்கல் மற்றும் கழிவகற்றல் பிரிவுக்கு 'அனைவருக்கும் நீர்' போன்ற பிரதான நீர் வழங்கல் வேலைத்திட்டங்கள் மற்றும் சில கழிவகற்றல் கருத்திட்டங்களையும் கொண்டுள்ளது.

**விசேட செயற்பாடுகள்**

- தொடர்புடைய அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 35 கருத்திட்டமுன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.
- நெடுஞ்சாலைகள் அமைச்சு, போக்குவரத்து அமைச்சு, துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சு, நீர் வழங்கல் அமைச்சு அல்லது வீதிகள், போக்குவரத்து, துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து மற்றும் நீர்வழங்கல் தொடர்பான அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள எந்தவொரு அமைச்சினாலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் கொள்கைப் பத்திரங்கள் தொடர்பான அவதானிப்புக்களைத் தயாரித்தல்.

- பிரதான அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 48 அமைச்சரவைப் பத்திரங்கள் மீதான அவதானிப்புக்களை வழங்கியமை.
- கொள்கைகள் மற்றும் உத்திகளை உருவாக்குவதற்கு தொடர்புடைய பிரதான அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப பங்களிப்புக்கள் வழங்கப்பட்டமை.
  - பின்வரும் குழுக்களின் உறுப்பினராகச் செயற்படல்.
    - கழிவகற்றல் கொள்கையை அபிவிருத்தியடையச் செய்தல் மற்றும் சட்டம் எண். 2-1974 NWSDB நீர்ச் சட்டத்தின் திருத்தம்.
    - பேருந்துக் கட்டணத் திருத்தம் மற்றும் பேருந்து உரிமம் வழங்குதல் கருத்திட்ட வழிகாட்டல் குழுக்கள்
- வெளிநாட்டு உதவிக்கான பணி குறிப்புக்கள் குறித்து கருத்து வெளியிடல்.

**மின்சக்தி மற்றும் எரிசக்திப் பிரிவு**

மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறையானது மின்சாரம் மற்றும் கனிய எண்ணெய் தொழில்களைக் குறிக்கிறது. மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய பொருட்கள் இறக்குமதிக்கு ரூ. 500,000 மில்லியன் செலவிடப்படுகிறது. நாட்டில் தற்போதைய மொத்த மின் உற்பத்தி, இணைக்கப்பட்ட கொள்ளளவு முறையே 15,720 GWh, 4,265 MW ஆகும். இலங்கையில் தனிநபர் மின்சார நுகர்வைக் கருதினால், இது 652 kW / h ஆகக் காணப்படுவதுடன், இது நாட்டின் வருடாந்த மின்சார தேவையை 5.5% ஆல் அதிகரிக்கின்றது.

தேசியக் கொள்கைக் கட்டமைப்பின் சுபீட்சத்தின் நோக்கின் பிரகாரம், புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களினூடாக மின் உற்பத்தியை ஊக்குவிப்பதுடன் அவை மின் உற்பத்திக் கலவையில் ஒருங்கிணைப்பதில் விஷேட கவனம் செலுத்தப்படுகிறது. இச் சூழலில், காணப்படுகின்ற சக்திக் கலப்பிற்கு குறைந்த செலவு மற்றும் நம்பகமான ஏனைய சுத்தமான சக்தி மூலங்களை ஊக்குவிப்பதுடன் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களினூடாக மொத்த மின்சார உற்பத்தியில் 70 சதவீதத்தை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, எரிசக்தி மற்றும் மின்சக்தி துறையில் அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்வதற்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் இலங்கை அரசாங்கத்தினால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதில் சமீபத்திய போக்கையும் அரசாங்கம் ஊக்குவித்துள்ளது. அதன்பிரகாரம், மின் உற்பத்தி மூலங்களாகிய நிலக்கரி, இயற்கை எரிவாயு, நீர் மற்றும் எண்ணெய் போன்ற மார்பு சார் மூலங்களில் இருந்து சூரிய ஒளி, காற்று, கடல் அலைகள், புவிவெப்பம் மற்றும் உயிரினப் பதார்த்தங்கள் போன்ற மரபுசாரா மூலங்கள் வரை காணப்படுகின்றன. இப்பிரிவில் 'கார்பன் நடுநிலைமை' மீறாமல் மின்சாரம் மற்றும் எரிசக்தி துறையின் அபிவிருத்திக்காக தேசிய திட்டமிடல் திணைக்களமானது பூரணமான பங்களிப்பை வழங்கியுள்ளது. 2021 இல் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பங்களிப்பை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

- தொடர்புடைய அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 36 கருத்திட்டமுன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன
- National Decarburization Policy, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்த கொள்கை நோக்கம், மற்றும் அணுசக்தி தொழில்நுட்பத்தை அமைதியான முறையில் பயன்படுத்துவதற்கான இருதரப்பு ஒப்பந்தம் குறித்த அமைச்சரவைப் பத்திரம் உட்பட 09 அமைச்சரவைப் பத்திரங்கள் மீதான அவதானிப்புக்களை வழங்கியமை.
- வெளி நாட்டுப் பணிகள் (Foreign Mission) தொடர்பான காரணிகளில் அவதானிப்புக்களை வழங்கியமை.

- வாயு பயன்பாட்டின் பிரதான திட்டம் (Gas Utilization Master Plan) தொடர்பான குழுக்களில் கலந்து கொண்டமை.
- ஆசியா மற்றும் பசுபிக் வலயங்களில் குறைந்தபட்ச கார்பன் பரிமாற்றத்திற்கு பங்களிப்பை வழங்குகின்ற எரிசக்தி கொள்கைகள் தொடர்பாக விருத்தி செய்வதற்கான கருத்துக்களை முன்வைத்தல் (Energy Policy Supporting Low Carbon Transition in Asia and the Pacific).

## 2.4. நகர அபிவிருத்தி, வீட்டுவசதி

**நகர அபிவிருத்தி, வீட்டுவசதிப் பிரிவு**

உலகளாவிய மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் 80% நகர்புறமாகக் காணப்படுவதுடன் நகர்ப்புற அபிவிருத்தி ஒரு நாட்டின் அபிவிருத்தி மற்றும் செழுமையின் அளவைப் பிரதிபலிக்கும் ஒரு முக்கிய காரணியாகும். இலங்கையின் அபிவிருத்திக்கு நகரப் பிரதேசங்களும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதுடன் நகர்ப்புற பகுதிகளின் திறன் மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றை விருத்தி செய்கின்ற சிறந்த அமைப்புடன் நிலையான மற்றும் கவர்ச்சிகரமான நகர்ப்புற வசதிகளை நிறுவுவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு நகர்ப்புறத் துறையின் பங்களிப்பை பெரிதும் விருத்தி செய்ய முடியும். இதற்காக பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் முகாமைத்துவத் தொகுதிகளின் மேம்படுத்தலும் அவசியமாகும். மேலும் தற்போதைய உட்கட்டமைப்பு வசதிகளின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டியதும் அவசியம்.

சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கையினுள் நகர்ப்புற ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நகரங்களின் கட்டமைப்பு மாற்றங்களைக் குறைப்பதில் கவனம் செலுத்தப்படுவதுடன் பசுமை நகரங்கள், ஸ்மார்ட் நகரங்கள் மற்றும் செங்குத்து நகரங்கள் போன்ற நவீன நகர்ப்புற வளர்ச்சிக் கருத்துக்களின் அடிப்படையில் நிலையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற வளர்ச்சிக்கான கொள்கை வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளன.

நாட்டில் உள்ள 6 மில்லியன் குடும்பங்களில், 5.2 மில்லியன் குடும்பங்கள் மட்டுமே சில வகையான வீட்டு வசதிகளைக் கொண்டுள்ளன. எனவே, சொந்த வீடு இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை 800,000 ஐ கடந்துள்ளன. மேலும், தற்போதைய எண்ணிக்கையில் கிட்டத்தட்ட 300,000 வீடுகள் தற்காலிக கூடாரங்கள் என்பதாலும் இந்தப் பிரச்சனை மேலும் வலுவடைந்துள்ளது.

தேவையான விதத்தில் இப் பிரிவின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின் கீழ் உருவாக்கப்பட்ட குறித்த கொள்கைகளுக்கு இணங்கும் விதமாக பொருத்தமான வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை இனங்கண்டு, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஆதரவும் பங்களிப்பும் வழங்கப்பட்டுள்ளன.

**விசேட செயற்பாடுகள்**

- பிரதான அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 15 அமைச்சரவைப் பத்திரங்கள் மீதான அவதானிப்புக்களை வழங்கியமை.
- நகர அபிவிருத்தி மற்றும் வீட்டுவசதிகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 107 கருத்திட்டமுன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.
- செயற்பாட்டிலுள்ள கருத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்தல் தொடர்பான பரிந்துரைகள்.
- பொது முதலீட்டு திட்டத்தைப் புதுப்பித்தல்.
- கருத்திட்ட வழிநடத்தல் குழுக்களில் பங்கேற்றல்.

- வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களினூடாக நிதியளிக்கப்படும் கருத்திட்டங்கள் தொடர்பாக குறித்த நிறுவனங்களுடன் செயற்படல்.
- முன்னேற்ற ஆய்வு கூட்டங்களில் பங்கேற்றல்.
- கருத்திட்டங்கள் / துறைசார் அபிவிருத்தி தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல்.
- தேசிய மற்றும் துறைசார் கொள்கைகளைத் தயாரிப்பின் பங்களிப்பு.

## 2.5. சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் விருத்தி, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், சமூகப் பாதுகாப்பு

**சுகாதாரப் பிரிவு**

கொவிட் 19 வைரஸைக் கட்டுப்படுத்துவதும் அதன் பரவலைத் தடுப்பதும் இந்த ஆண்டு அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும். அதன் பிரகாரம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் போன்ற உதவி வழங்கும் நிறுவனங்களுடன் இணைந்து தடுப்பூசிகளை கொள்வனவு செய்தல், தடுப்பூசிகளை வழங்குவதற்கான பௌதீக வசதிகளை விருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளை ஏற்படுத்தி கொவிட் 19 வைரஸுக்கு எதிரான எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்துவதற்காக குறிப்பிடத்தக்க முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், அரசாங்கத்தினால் 2021-2022 ஆம் ஆண்டிற்குரிய 23,000 மில்லியன் ரூபா நிதி 2021 வரவு செலவுத் திட்டத்தினூடாக சுகாதாரத் துறைக்காக ஒதுக்கபட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் அதில் 10,000 மில்லியன் ரூபாவை நாடு பூராகவுமுள்ள மகப்பேறு மற்றும் சிறுவர் சிகிச்சை நிலையங்கள், மருந்தகங்கள், முதியோர் சேவை நிலையங்கள், ஆய்வுகூட சேவைகள், சுகாதார நிலையங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை விரிவுபடுத்துவதற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, மேலும் 5,000 மில்லியன் ரூபா கிராமப்புற மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளை விருத்தி செய்வதற்கு 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்டதுடன், அந் நிதியானது குறித்த மாகாண சபைகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது.

விசேட செயற்பாடுகள்

- 34 கருத்திட்ட முன்மொழிவுகளிற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்குரிய அவதானிப்புக்கள் குறித்த பிரதான அமைச்சு, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் என்பவற்றிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- சுகாதார அமைச்சு, மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு, சுதேசிய வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சு ஆகியவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட 07 அமைச்சரவைப் பத்திரங்களிற்குரிய அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

- சுகாதாரத் துறைக்காக எதிர்வரும் ஆண்டுகளில் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட திட்டங்களை கருத்திற்கொண்டு கருத்திட்ட வரிசையை புதுப்பித்தல்.

- சுகாதாரத் துறையுடன் தொடர்புடைய செயற்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு உதவிகள் வழங்கும் கருத்திட்டங்களிற்குரிய கூட்டங்களை ஒழுங்குபடுத்தி குறித்த அவதானிப்புக்களை உலக சுகாதார தாபனம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிதி உதவி வழங்கும் நிறுவனங்களின் முகவர்களிற்கு வழங்குதல்.

**கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் விருத்தி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவுகள்**

**கல்விப் பிரிவு**

ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்கான மாணவர்களின் அனுமதியை கருத்திற்கொண்டால் நாட்டின் கல்விக்கான அனுமதி உயர் நிலையில் காணப்படுவதுடன் அது அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு இணையான பெறுமதியைக் கொண்டுள்ளது. இதுவரையில் வயது வந்தோரின் கல்வியறிவு 91.7 சதவீதமாக உயர்வடைந்துள்ளதுடன், மேலும் நாட்டின் ஆரம்பக் கல்விக்குரிய அனுமதி 99.11 சதவீதமாக காணப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில், இலங்கை மனித அபிவிருத்தி சுட்டெண்ணில் (HDI) 0.782 புள்ளிகளுடன் 72 வது இடத்தில் காணப்பட்டது. இலங்கையின் பெறுமதி உயர் மனித அபிவிருத்திச் சுட்டெண்களைக் கொண்ட நாடுகளின் சராசரிப் பெறுமதி (0.753) மற்றும் தெற்காசியாவில் நாடுகளின் சராசரியை விட (0.641) அதிகமாகும். இதுவரையில் 10,175 அரசப் பாடசாலைகளில் சுமார் 4,214,000 மாணவர்கள் காணப்படுவதுடன், சுமார் 247,000 ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். மேலும், அரச அங்கீகாரம் பெற்ற 81 தனியார் பாடசாலைகளும், 25 விசேட கல்விப் பாடசாலைகள் மற்றும் 749 பிரிவேனாக்களும் காணப்படுகின்றன. அரசப் பாடசாலைகளில் மாணவர்-ஆசிரியர் விகிதம் 16:1 ஆக காணப்படுகிறது.

**பிரதானமான வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்;**

- தற்போது காணப்படுகின்ற பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் தரமுயர்த்தலில் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 ஆக அதிகரித்தல் மற்றும் 20 புதிய மும்மொழி இடைநிலை தேசிய பாடசாலைகளை நிறுவுதல்.
- உலக வங்கியினால் நிதியுதவியளிக்கப்படுகின்ற பொதுக் கல்வி நவீனமயமாக்கல் கருத்திட்டம்.
- மாகாண மற்றும் வலய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வள மையங்களை வலுப்படுத்துதல்.
- 3577 ஆரம்ப நிலை பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்திக் கருத்திட்டம்.
- தோட்டப் பாடசாலைகளை இடைநிலை நிலைக்கு தரமுயர்த்தல்.

**2021.12.31 இல் முன்னேற்றம்**

| | பரிந்துரைக்காக பெறப்பட்ட எண்ணிக்கை | வழங்கப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கருத்திட்ட முன்மொழிவுகள் | 10 | 10 |
| அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்கள் | 05 | 05 |
| அமைச்சரவைப் பத்திரங்களிற்கான கருத்துக்கள் | 02 | 02 |

**கூட்டங்களில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் -** கல்விப் பிரிவு தொடர்பான வழிநடத்தல் குழுக் கூட்டங்கள், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்ட கூட்டங்களில் பங்கேற்றமை.

**உயர் கல்வி**

புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுதல் மற்றும் பெரும்பாலான அரச பல்கலைக்கழகங்களில் புதிய பீடங்கள் மற்றும் கட்டிடங்களை நிறுவுவதினூடாக உயர்கல்விக்கான அனுமதியை

அதிகரித்து 2021 இல் உயர்கல்வித் துறை விரிவடைந்து காணப்பட்டது. அதன்பிரகாரம், பல்கலைக்கழக மானியக் குழுவின் (U.G.C) மேற்பார்வையின் கீழ், ஓட்டு மொத்த உயர்கல்வித் தொகுதியினுள் செயற்படுகின்ற அரச பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை 17 ஆகவும், உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை 20 ஆகவும் அதிகரித்துள்ளது. இது 2010 மற்றும் 2020 க்கு இடையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை 19,739 ஆல் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் அரச பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளாகிய விரிவுரை மண்டபங்கள், மாணவர் விடுதிகள், நூலகங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் கழிவகற்றல் வசதிகளை மேம்படுத்தல் போன்ற நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பட்டப் படிப்பு பாடத்திட்டங்களின் தரங்களை விருத்தி செய்வதற்கும் ஒதுக்கீடாக 80.27 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கம்பஹா விக்கிரமராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகம் போன்ற இரண்டு புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுதல் மற்றும் இலங்கை மற்றும் பல வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையில் பல ஆராய்ச்சி ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுதல் உட்பட 34 கருத்திட்ட முன்மொழிவுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், உயர் கல்வியின் பல்வேறு துறைகளில் வெளிநாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ஆராய்ச்சி மானியங்கள் நன்கொடைகளிலிருந்து அதி தரமான பட்டதாரிகளை உருவாக்கல் மற்றும் பட்டப் படிப்புகளின் தரத்தை மேம்படுத்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், 2021 ஆம் ஆண்டினுள், நாட்டில் உள்ள மாணவர்களுக்கு உயர்கல்விக்கான அனுமதியை விரிவுபடுத்தும் நோக்கில் அரசு சாரா உயர்கல்வி நிறுவனங்களை முறைப்படுத்தவும் விரிவுபடுத்தவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**பிரதானமான வேலைத்திட்டங்கள்**

- உயர்கல்வி நிறுவனங்கள் தொடர்பான புதிய கருத்திட்டங்கள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடல்களில் செயற்பாட்டு ரீதியாக பங்கேற்றல்.
- வெளிநாட்டு உதவிகளின் அடிப்படையில் செயற்படுகின்ற கருத்திட்டங்களில் வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் நடைபெறுகின்ற கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல், வழிநடத்தல் மற்றும் கருத்திட்ட வழிநடத்தல் குழு கூட்டங்களில் பங்கேற்றல்.
- கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய கருத்திட்ட அறிக்கைகளை உள்ளடக்கி எதிர்கால கருத்திட்டப் பட்டியலைப் புதுப்பித்தல்.
- உயர்கல்வித்துறையில் தொடர்புடைய 28 அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் 34 கருத்திட்ட முன்மொழிவுகளை பரிந்துரை செய்தல்.

**திறன் விருத்திக் கல்வி**

நாட்டினுள் தேசிய, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் மிகவும் திறமையான மற்றும் தகுதியுள்ள பணியாளர்களைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை அரசாங்கம் இனங்கண்டுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு, தேசியக் கொள்கைக் கட்டமைப்பிற்கு அமைவாக கல்விச் சீர்திருத்தம் மற்றும் திறன் மேம்பாட்டின் மாற்றமான கட்டமொன்றை அறிவிப்பதற்காக பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அரசாங்கத்தினால் 2021-2030 "திறன் மேம்பாட்டுப் பத்தாண்டு" என பிரகடனப்படுத்தபட்டுள்ளது. அதன் பிரகாரம், தொழில்நுட்ப, தொழில் கல்வி பயிற்சி (TVET) இற்குரிய அனுமதியை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், பயிற்சியாளர்களிற்கு திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் தொழிலாளர் சந்தையில்

கேள்விக்கேற்ப தாம் விரும்பும் தொழில்களில் திறன்களைப் பெறவும் TVET அமைப்புடன் இணைவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**பூரணப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்**

- திறன் மேம்பாட்டுப் பிரிவு தொடர்பான மதிப்பீட்டிற்காக 15 கருத்திட்ட முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 08 முறையான நியாயமான மதிப்பீட்டு அறிக்கைகள் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் / வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- திறன் கல்விப் பிரிவுடன் தொடர்புடைய 12 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகளைத் தயாரிக்கப்பட்டன.
- திறன் அபிவிருத்திப் பிரிவு தொடர்பான அமைச்சு மற்றும் அரச நிறுவனங்களுடன் பல கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.

**தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்**

இருபத்தோராம் நூற்றாண்டு அறிவை மையமாகக் கொண்ட நூற்றாண்டு என் அழைக்கப்படுகிறது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான அரசாங்கக் கொள்கையாகக் காணப்படுவது தொழில்நுட்ப அடிப்படையிலான சமூகத்தை உருவாக்குவதுடன் அது உலகளாவிய கண்டுபிடிப்பு மையமாக, மக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் அரசாங்கத்தை உருவாக்கல், டிஜிட்டல் மயமாக்கப்பட்ட இலங்கையை உருவாக்கல் மற்றும் தகவல் தொழில்நுட்ப ரீதியிலான தொழில் முனைவோரை உருவாக்கலினூடான கட்டியெழுப்பலை எதிர்ப்பார்க்கிறது. இந்த நோக்கங்களை அடைவதற்கு புதிய தொழில்நுட்பங்களுக்கான உத்திகளை சரியான நேரத்தில் முதலீடு செய்வது மற்றும் நமது கல்வி முறை மற்றும் பொருளாதாரத்துடன் அத்தகைய கண்டுபிடிப்புகளை ஒருங்கிணைப்பது காலத்தின் தேவையாகும். "தேசிய டிஜிட்டல் மாற்றம் நிகழ்ச்சி நிரல்" தொழில்நுட்பம் மற்றும் அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் முக்கிய பங்கை வகிப்பதற்கு பங்குதாரர்களிற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படுகிறது. புதிய தொழில்நுட்ப முயற்சிகளைத் ஆரம்பிப்பதற்காக தொழில்முனைவோருக்கு சாதகமான சூழலை உருவாக்குவதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் மற்றும் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்காகவும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையை உலகின் வளர்ந்து வரும் இலக்குகளில் ஒன்றாக விருத்தி செய்வதை அரசாங்கம் நோக்காகக் கொண்டுள்ளது.

**பூரணப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்**

- பதினைந்து கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீட்டிற்காக பெறப்பட்டு, அவற்றில் 10 கருத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது
- 04 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகளைத் தயாரிக்கப்பட்டன.
- குறித்த அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் பல கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.

**சமூகப்பாதுகாப்புப் பிரிவு**

"சுபீட்சத்தின் நோக்கு" அரசாங்கக் கொள்கைக் கட்டமைப்பிற்கு அமைவாக, அரசின் ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புக் கொள்கையானது, சமூகத்தில் உயிர் வாழ்கின்ற சிறப்புரிமை பெற்ற அத்தியாவசியமான அனைத்து மக்களிற்காகவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதற்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி அணுகுமுறைக்கு ஏற்றவாறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயற்படுத்துவதாகும்.

சமுர்த்தி, உள்ளகப் பொருளாதார, நுண்ணிதி, சுய தொழில், தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன் பள்ளி மற்றும் ஆரம்பக் கல்விப் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு என்பன குழந்தைகள், பின்தங்கிய பெண்கள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்றோர் உட்பட பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் நல்வாழ்வை உறுதிசெய்யும் பொறுப்புள்ள முக்கிய அமைச்சுக்களாகும்

**31.12.2021 இல் முன்னேற்றம்**

- **கருத்திட்ட முன்மொழிவுகளுக்கான மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புகளைத் தயாரித்தல்.**

| | பரிந்துரைக்காக பெறப்பட்ட எண்ணிக்கை | வழங்கப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கருத்திட்ட முன்மொழிவுகள் | 10 | 10 |
| அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்கள் | 03 | 03 |
| அமைச்சரவைப் பத்திரங்களிற்கான கருத்துக்கள் | 02 | 02 |

- **பரிந்துரைகளை சமர்ப்பித்தல் -** தேசிய சமூகப் பாதுகாப்பு மதிப்பீட்டின் இறுதி அறிக்கை, தேசிய சமூகப் பாதுகாப்பு உத்தி வரைவு மற்றும் ஆரம்பக் குழந்தைப் பருவ அபிவிருத்தி (Early Childhood Development) வேலைத்திட்டத்தை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகள்.

- **கொள்கை மதிப்பாய்வு மற்றும் மதிப்பீடு -** பின்வரும் கொள்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

  - கொவிட் - 19 திட்டம்
  - தேசிய சமூக பாதுகாப்பு தொடர்பான கொள்கைக் கட்டமைப்பு

- **பின்வரும் அறிக்கைகள் தொடர்பாக கருத்துக்கள் வழங்கப்பட்டன**.
  - "இலங்கையில் நீண்ட கால பராமரிப்பு தொடர்பாக 2020 ஜூன் மாத ஆய்வு"
  - ஆண், பெண் இனங்கள் மற்றும் தொழிலாளர் நிபுணத்துவத்தினூடாக COVID-19 இன் தாக்கத்திலிருந்து மீட்பதற்கான தேசிய அபிவிருத்தித் திட்டங்களிற்கான பங்களிப்புக்களை வழங்கல் (66 நாட்கள், 4 மாதங்களுக்கு மேல், இடையிடையே)
  - வரைவு: உலக வங்கியினால் இலங்கையின் முறையான தீர்ப்பு - Sri Lanka Systematic Country Diagnostic (SCD)

- **கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பிரதிநிதித்துவம் -** சமூகப் பாதுகாப்பு பிரிவில் தொடர்புடைய பிரதான நிறுவனங்களால் நிகழ்த்தப்பட்ட வழிநடத்தல் குழு கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டங்களில் பங்கேற்று சமூகப் பாதுகாப்பு செயலற்திறனை விருத்தி செய்வதற்காக தேவையான பங்ககளிப்புக்கள் வழங்கப்பட்டன.

## 2.6. பொது முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம், கலாச்சார மற்றும் மத விவகாரங்கள்

**நிர்வாகம் மற்றும் பொது முகாமைத்துவப் பிரிவு**

பொது நிர்வாகம், பொது மக்கள் பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு, ஊடகம், நீதித்துறை, வெளிநாட்டு உறவுகள், கலாச்சார விவகாரங்கள் மற்றும் தேசிய பாரம்பரிய நிர்வாகம் மற்றும் பொது முகாமைத்துவம் பிரிவின் கீழ் கருதப்படும் முக்கிய விடயங்கள் ஆகும். இதற்கு மேலதிகமாக, சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் விஷேட செலவினப் பிரிவும் இப் பிரிவின் கீழ் உள்ளடங்குகின்றன.

2021 ஆண்டில் நிர்வாகம் மற்றும் பொது முகாமைத்துவப் பிரிவினால் இந்நாட்டின் வினைத்திறனான அரச சேவை மற்றும் சட்ட அமுலாக்கத்திற்குப் பாதுகாப்பான சூழலை உறுதி செய்வதில் அரசாங்கத்தின் தேசியப் பொருளாதாரக் கொள்கையினூடாக குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் உத்திகளின் அடிப்படையில் முக்கியமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பிரகாரம், கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல், அமைச்சரவைப் பத்திரங்களிற்கு அவதானிப்புக்களை வழங்குதல் மற்றும் நடுத்தர கால வரவு செலவு திட்டக் கட்டமைப்பை தயாரித்தல் போன்றவற்றில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், நவீன தொழில்நுட்பத்தினூடாக பொதுமக்கள் நட்பு அரச சேவையை கட்டியெழுப்பல், ஜனநாயக சுதந்திரத்தை பாதுகாத்தல், நட்புரீதியான வெளியுறவுக் கொள்கையை செயற்படுத்தல், மோசடிகள் மற்றும் ஊழலற்ற நாட்டை உருவாக்குதல், அரச சேவையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்ததுவத்தை இலக்காகக் கொண்ட திட்டமிடல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், இப் பிரிவினால் 2021 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- பொது நிதி அல்லது விஷேட நிதிகளினூடாக நிதியுதவி மேற்கொள்வதற்காக 207 கருத்திட்ட முன்மொழிவுகளிற்கான மதிப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன.
- வெவ்வேறு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 53 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்கள் வழங்கபட்டன.
- பிரிவின் விடயத்தின் கீழ் காணப்படுகின்ற வழிநடத்தல் குழு முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் கருத்திட்டப்பணிகள் தொடர்பாக மேலதிக கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் மற்றும் பங்கேற்றல்.
- குறித்த கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுப்பதில் தொடர்புடைய அமைச்சுக்களிற்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கல்.
- பொது முதலீட்டைத் திட்டமிடுவதற்காக தொடர்பாக குறித்த அதிகாரிகளுடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.

## 2.7. தொழிற்துறை

**தொழிற் பிரிவு**

தொழிற்துறை என்பது உற்பத்தியின் நான்கு முக்கிய காரணிகளில் ஒன்றாகும் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்கான ஒரு நபரின் உடல், உள மற்றும் சமூக ரீதியாக தாங்கும் முயற்சியின் அளவீடு ஆகும். பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த உற்பத்தித்திறன் உழைப்பின் தரத்திலேயே தங்கியுள்ளது. கடின உழைப்பாளியை உருவாக்கும் நோக்கத்துடன் "உற்பத்தித் திறனான பிரஜை மற்றும் மகிழ்ச்சியான குடும்பம்" என்ற கொள்கையின் அடிப்படையில் "நாட்டிற்காக உழைக்கும்" கலாச்சாரத்தை உருவாக்குதலானது

"சுபீட்சத்தின் நோக்கு" தேசிய கொள்கை கட்டமைப்பினூடாக எதிர்பாக்கப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் இயக்கமானது உடல் ,உள ஆரோக்கியம் மற்றும் நன்கு ஒருங்கிணைந்த தொழிலாளர் உற்பத்தித்திறன் ஆகியவற்றை சார்ந்துள்ளது. எனினும், உற்பத்தி செயன்முறையில் துரித விருத்தியை அடைவதற்கும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் இலங்கையில் தொழில்நுட்பம் மற்றும் அறிவு சார்ந்த தொழில்துறை சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். எனவே, தொழிற்சாலைகளிற்காக சிறந்த தொழில்நுட்ப அறிவுஜீவிகளை ஈர்ப்பதற்காக அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

தொழில் அமைச்சுடன் இணைந்து கொள்கைகளை உருவாக்குதலில் பங்களிப்பை வழங்கல், கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல், அமைச்சரவைப் பத்திரங்களை பரிசீலித்து அவற்றுக்குரிய அவதானிப்புக்களை வழங்குதல் என்பன இப்பிரிவின் அதிகாரிகளின் முக்கிய பங்களிப்புகளாகும். அதன் பிரகாரம், 2021 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

- இரண்டு கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களிற்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- தொழிலாளர் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு அமைச்சரவைப் பத்திரங்கள் மீதான அவதானிப்புகளைச் சமர்ப்பித்தல்.
- தொழிலாளர் துறையில் தொடர்புடைய தகவல் மற்றும் தரவுகளை வழங்குவதன் மூலம் 2021-2024 பொது முதலீட்டுத் திட்டத்தை உருவாக்குவதற்கான பங்களிப்பு.

## 2.8. இளைஞர், விளையாட்டு மற்றும் பிராந்திய அபிவிருத்தி

### இளைஞர் விவகாரப் பிரிவு

மொத்த சனத்தொகையில் நான்கில் ஒரு பங்காக இருக்கும் ஆற்றல் மிக்க இளைஞர்களை, நிலையான அபிவிருத்திச் செயல்முறையில் தீவிரமான பங்களிப்பை பெறல் அவசியமாகும். அவர்களின் அபிலாஷைகளை இனங்கண்டு அதற்கான திட்டவட்டமான நிரந்தர வேலைத்திட்டத்தை உருவாக்குவதன் மூலம் திருப்திகரமான இளம் தலைமுறையை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். இதற்காக அரசியல் ரீதியான தீர்மானங்கள் எடுப்பதில் மற்றும் பொது நிர்வாகத்தில் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை பெற்றுக் கொள்ளல், இளம் தொழில்முனைவோருக்கு பொருளாதார வழிமுறைகளை கையாள்வதற்காக அதிகாரமளித்தல், இளைஞர்களின் முதலீட்டை எளிதாக்குவதற்கான நிதியத்தை உருவாக்கல், பொது, தனியார் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களிற்கு ஏற்ற இளைய தலைமுறையை உருவாக்குதல் என்பவற்றை நோக்காகக் கொண்டுள்ளது.

### விளையாட்டுப் பிரிவு

விளையாட்டு இளைஞர்களின் உயிர்நாடியாகும். துடிப்பான, ஆரோக்கியமான மற்றும் ஒழுக்கமான சமுதாயத்தை கட்டியெழுப்புவதில் விளையாட்டு அத்தியாவசியமான பகுதியாக கருதும் ஒரு சமூகத்தை உருவாக்கல் எதிர்பாக்கப்படுகிறது. இதன் போது, பாடசாலை மட்டத்தில் இருந்தே விளையாட்டுத்திறனை ஏற்படுத்தி, விஷேட விளையாட்டு திறன் கொண்ட பிள்ளைகளைக் கண்டறிந்து, அவர்களை சர்வதேச அளவில் கொண்டு செல்லல், விளையாட்டு கல்விக்காக உயர்கல்வி வாய்ப்புகளை வழங்கல், விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை நிறுவுதல்,விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், விளையாட்டு ஆலோசகர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பிசியோதெரபிஸ்டுகளை உருவாக்கும் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துதல், சந்தையில் விளையாட்டுப் பொருட்கள் மற்றும்

தொடர்புடைய கருவிகளின் பெறுவனவுகளை அதிகரித்தல், விளையாட்டு கல்வி உதவிகளை வழங்குதல் மற்றும் இலங்கையில் விளையாட்டுப் போட்டிகளுக்கு அரச அனுசரணை வழங்குதல் என எதிர்பார்க்கப்படுகிறது.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் தொடர்பாக 17 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் மற்றும் தொடர்புடைய பிரதான அமைச்சுக்கு தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டன. பிரதான அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட 10 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2021 - 2024 காலப்பகுதிக்கான பொது முதலீட்டு வேலைத் திட்டத்தைப் புதுப்பிப்பதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத் துறையுடன் தொடர்புடைய தகவல்களை வழங்குவதன் மூலம் பங்களிப்பை வழங்குதல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் 2030 திட்டத்திற்கான துறை சார்ந்த உள்ளீடுகளை (Sectorial Inputs) வழங்கியமை.

**பிராந்திய அபிவிருத்திப் பிரிவு**

வறுமையைப் போக்குவதற்கும், தற்போதுள்ள பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும், பிரதேசத்தின் தற்போதைய தனித்தன்மைகளைக் கண்டறிந்து அனைத்து சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதற்கு துறை சார்ந்த கொள்கை நடவடிக்கைகளுக்கான கொள்கை உள்ளீடுகளை (Policy Inputs) வழங்குகிறது. மேலும், துறைசார் மற்றும் நடுத்தர கால திட்டமிடல், கருத்திட்ட மதிப்பீடு மற்றும் கருத்திட்ட சீரமைப்பு ஆகியவற்றையும் கையாளுகிறது.

பிராந்திய அபிவிருத்தியின் போது, கிராமத்தை தனிமைப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக கிராமத்துடன் பிராந்தியத்தை இணைத்து வலயமொன்றாக அபிவிருத்தி செய்தல் அவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்ட வலயங்கள் தலைநகருடன் இணைக்கப்பட வேண்டும் என்பது பற்றி தற்போதைய அபிவிருத்திக் கொள்கைகளினூடாக வலியுறுத்தப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், தேசிய மட்டத்தில் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள வளங்களை உகந்த மற்றும் நிலையான மட்டத்தில் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை இப் பிரிவு வலியுறுத்துகிறது.

மேலும், 9 மாகாணங்களில் காணப்படுகின்ற பொருளாதார வளர்ச்சி வீதம், மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் தரவு, சமூகத் தரவுகள் மற்றும் அவற்றின் தற்போதைய மாற்றங்களை பகுப்பாய்வுகள் மேற்கொள்ளும் போது 9 மாகாணங்களினதும் அடிப்படை அபிவிருத்தி பிரச்சினைகள், முரண்பாடுகள், சவால்கள் மற்றும் பலம் ஆகியவற்றை வெளிப்படுத்தலாம்.

இதனூடாக விவசாயம், தொழிற்துறை, உட் கட்டமைப்பு வசதிகள், மனித வள அபிவிருத்தி போன்ற துறைகளில் தற்போதுள்ள இடைவெளிகளை நிரப்ப தேவையான உள்ளீடுகளை வழங்குதல்.

## 2.9. பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

### 1. பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் - 2021

2021 ஆம் ஆண்டுக்கான பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு 10 மில்லியன் ரூபா வீதம் 2,250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. 31.12.2021 இல் மாவட்டச் செயலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூ.2,232.43 மில்லியன் மதிப்பிலான சுற்று நிரூபத்திற்கு அமைவாக செயற்படுத்துவதற்கு இயலுமான 30,767 அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளிற்கு ஒப்புதல்

வழங்கி செயற்படுத்துவதற்குத் தேவையான நிதியுடன் நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்டச் செயலர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

மாவட்ட அளவில் தெரிவிக்கப்பட்ட முன்னேற்றத்தின் பிரகாரம், 31.12.2021 இல் நாளொன்றுக்கு ரூ.2,115.65 மில்லியன் பெறுமதியான 30,193 கருத் திட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன. மாவட்ட ரீதியிலான தகவல்கள் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| S No | District | Physical Progress | | | Financial Progress | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Number of Projects Approved | Number of Projects Completed | % | Allocation Released Rs. Mn | Total Value of Works Rs. Mn | % |
| 1 | Ampara | 938 | 933 | 99% | 84.04 | 82.65 | 98% |
| 2 | Anuradhapura | 1489 | 1443 | 97% | 90.24 | 84.87 | 94% |
| 3 | Badulla | 1640 | 1578 | 96% | 87.83 | 80.35 | 91% |
| 4 | Batticaloa | 418 | 417 | 100% | 54.40 | 53.50 | 98% |
| 5 | Colombo | 2380 | 2363 | 99% | 247.79 | 234.96 | 95% |
| 6 | Galle | 1468 | 1468 | 100% | 96.22 | 87.56 | 91% |
| 7 | Gampaha | 1099 | 1087 | 99% | 203.51 | 194.89 | 96% |
| 8 | Hambantota | 958 | 958 | 100% | 70.82 | 69.89 | 99% |
| 9 | Jaffna | 736 | 736 | 100% | 61.36 | 61.33 | 100% |
| 10 | Kalutara | 687 | 668 | 97% | 134.95 | 128.49 | 95% |
| 11 | Kandy | 2138 | 2110 | 99% | 162.21 | 156.11 | 96% |
| 12 | Kegalle | 2470 | 2315 | 94% | 109.59 | 97.70 | 89% |
| 13 | Kilinochchi | 130 | 130 | 100% | 15.04 | 14.90 | 99% |
| 14 | Kurunegala | 4868 | 4840 | 99% | 175.61 | 170.83 | 97% |
| 15 | Mannar | 288 | 287 | 100% | 23.11 | 22.76 | 98% |
| 16 | Matale | 1018 | 1012 | 99% | 51.90 | 51.01 | 98% |
| 17 | Matara | 1430 | 1407 | 98% | 76.53 | 71.26 | 93% |
| 18 | Monaragala | 878 | 870 | 99% | 67.63 | 65.14 | 96% |
| 19 | Mullaitivu | 278 | 278 | 100% | 26.76 | 26.72 | 100% |
| 20 | Nuwara Eliya | 1198 | 1181 | 99% | 82.13 | 75.86 | 92% |
| 21 | Polonnaruwa | 844 | 843 | 100% | 50.29 | 49.54 | 99% |
| 22 | Puttalam | 1184 | 1178 | 99% | 79.85 | 75.46 | 95% |
| 23 | Ratnapura | 1477 | 1340 | 91% | 113.40 | 97.32 | 86% |
| 24 | Trincomalee | 481 | 479 | 100% | 41.53 | 41.27 | 99% |
| 25 | Vavuniya | 272 | 272 | 100% | 21.37 | 21.30 | 100% |
| **Total** | | **30767** | **30193** | **98%** | **2,228.08** | **2,115.65** | **95%** |

**2. கிராமப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம் (RIDP)**

2021 வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கிராமிய உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காக ரூ. 8,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அதனூடாக 2020 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட “சபிரி கமக்” வேலைத்திட்டம் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கிராமிய உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட

கருத்திட்டங்கள் தொடர்பான நிலுவையில் உள்ள பற்றுச் சீட்டுக்களை பூர்த்தி செய்வதற்கு மற்றும் 203 தொடர் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூ. 5,386.55 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டது.

31.12.2021 இல், இது வரை 177 தொடர் கருத்திட்டங்களின் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், தேசிய கணக்குகள் திணைக்களத்தின் செலவின அறிக்கையின் பிரகாரம் நிலுவையில் உள்ள பற்றுச் சீட்டுக்கள் மற்றும் தொடர் கருத்திட்டங்களிற்காக ரூ. 5,304.88 மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

**3. Promoting Autonomy, Literacy and Attentiveness through Market Alliances (PALAM/A) Project in Sri Lanka**

இக் கருத்திட்டத்தின் கீழ், உதவியாக இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்களுக்குச் செலுத்த வேண்டிய விசேட வர்த்தக வரியைச் செலுத்துவதற்கு பதிலாக மற்றும், உணவுப் பொருட்களின் மதிப்பை கணக்கிடுவதற்கும் 2021- வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பின்வரும் விதத்தில் நிதி ஏற்பாடுகள் காணப்பட்டதுடன் மேலதிகமாக தேவையான நிதி பெறப்பட்டதுடன் 2021.12.31 இல் செலவுகள் பின்வருமாறு காணப்பட்டன.

| செலவினத் தலைப்பு | 2021 வரவு செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் ரூ. | மேலதிகமாக பெறப்பட்டுள்ள நிதி ரூ. | மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. | செலவு ரூ. |
|---|---|---|---|---|
| 237-1-2-4-2506 (13) | 60,000,000.00 | 805,631,197.61 | 865,631,197.61 | 865,631,197.61 |
| 237-1-2-4-2506 (17) | 20,000,000.00 | 36,000,000.00 | 56,000,000.00 | 55,582,600.00 |

## 2.10. உலக உணவு வேலைத் திட்டம் (WFP)

**உணவு வேலைத் திட்டம்**

உலக உணவுத் திட்டத்தின் (WFP) பங்களிப்பானது உத்தியோக பூர்வமாக இலங்கையில் 1968 நவம்பர் 10 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கைச்சாத்திடப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டு இலங்கை அரசாங்கம் அதன் நடவடிக்கைகளுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. உலக உணவு வேலைத்திட்டத்தின் பல கட்டங்களில் உள்ள தலையீடுகளினால் வழங்கப்படும் பங்களிப்புக்களாவன அவசரகாலத் தயார்நிலை மற்றும் பதிலளிப்பு, பாடசாலை உணவு வேலைத் திட்டம், மிதமான ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தடுத்தல் மற்றும் நிர்வகித்தல், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அதிர்ச்சிகளிலிருந்து மீள்தல், வாழ்வாதார மேம்பாட்டிற்குரிய பங்களிப்பு மற்றும் தாங்கிக் கொள்ளும் தன்மையை விருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றலாகும். தற்போது, 2018 முதல் 2022 வரையிலான அரச மூலோபாயத் திட்டம் பிரதானமாக நிலையான அபிவிருத்தி இலக்குகள் எண் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டினியை ஒழிக்கும் நோக்கங்களுக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்படுகிறது. பின்வருவன முடிவடைந்த எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளாகும்.

- இலங்கையில் காலநிலை மற்றும் ஏனைய நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஆண்டு முழுவதும் உணவைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதி.

- உணவுப் பாதுகாப்பற்ற பகுதிகளில் காணப்படுகின்ற பாடசாலை செல்லும் சிறுவர்களிற்கு ஆண்டு முழுவதும் உணவுக்கான அனுமதியை வழங்கல்.
- இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பருவ வயதை அடைந்த பெண் பிள்ளைகள் மற்றும் குழந்தை பிறக்கும் வயதுடைய பெண்களின் ஊட்டச்சத்தை 2025 ஆம் ஆண்டளவில் விருத்தி செய்தல்.
- இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மற்றும் சிறுபோக விவசாயிகளின் ஆண்டு முழுவதும் வாழ்வாதாரத்தை மற்றும் அதிர்ச்சிகளைத் தாங்கும் திறனை வலுப்படுத்துதல்.

மேற்கூறிய பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக, 2018-2022 அரச மூலோபாயத் திட்டம், வருடாந்தத் திட்டங்களின் கீழ் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினூடாக செயற்படுத்தப்படுகிறது.

அதன் பிரகாரம், 2021 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1. இலங்கையில் நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆண்டு முழுவதும் உணவு கிடைப்பதற்கான அனுமதி.

   I. பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, பருவமழை பதிலளிப்பு ஒருங்கிணைப்பு மன்றத்தை நிகழ்த்தி வருடாந்த திட்டத்தில் அனர்த்தங்களைக் குறைப்பதற்கு இணையான சலுகைகளை வழங்குதல் மற்றும் பதிலளிப்பு, உரிய நேரத்தில் தகவல் மற்றும் முகாமைத்துவம், உணவுப் பாதுகாப்பு செயற்திட்டங்களுக்கான தொழில்நுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம், பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு ஆகிய நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப திறனை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. மொத்த செலவு ரூ. 10.22 மில்லியன் ஆகும்.

   II. தீ விபத்திற்குள்ளாகிய இனால் பாதிப்பிற்குள்ளாகிய 2,641 மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க 15 மில்லியன் ரூபா ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒருமுறை மாத்திரம் வழங்குகின்ற உதவித்தொகையாக மீனவரொருவரிற்கு ரூ. 5000 வழங்கப்பட்டது. மீன்பிடித் திணைக்களம் இக் கருத்திட்டத்தை செயற்படுத்தியது.

   III. கொவிட் தொற்றினால் ஏற்பட்ட பாதிப்புக்களிற்கு பதிலளிப்பாக மட்டக்களப்பு, களுத்துறை, மன்னார், மாத்தளை, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வாழுகின்ற 1,517 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களிற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ரூ.15.17 மில்லியன் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டடன. உணவுப் பொதியொன்றை கொள்வனவு செய்வதற்கு ஒரு தாய்க்கு ரூ.10,000 வழங்கப்பட்டது.

   IV. எண்ணெய் மற்றும் இரசாயன கசிவுகளுக்கு பதிலளிப்பதற்கும், தேசிய அளவில் எண்ணெய் மற்றும் இரசாயனக் கசிவுகளின் போது அதற்காக பதிலளிக்கும் திறனை குறித்த பங்குதாரர்களினுள் மேம்படுத்துவதற்கும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு ரூ.1.5 மில்லியன் வழங்கப்பட்டது.

2. உணவுப் பாதுகாப்பற்ற பகுதிகளில் உள்ள பாடசாலை வயது சிறுவர்களிற்கு ஆண்டு முழுவதும் உணவுக்கான அனுமதி.

பாடசாலை உணவு வேலைத் திட்டம் பொதுவாக கல்விக்கான அணுகக்கூடிய கருவியாகக் கருதப்படுகிறது, கல்விக்கு சமமான அணுகலை வழங்குகிறது மற்றும் கற்றல் வாய்ப்புக்களை விருத்தி செய்கிறது. அதன் பிரகாரம், பாடசாலை உணவு வேலைத் திட்டமானது உள்நாட்டு உணவு உற்பத்தியை தொடர்பு படுத்தி போசணையான உணவு வேளையொன்றை வழங்குவதினூடாக கல்வியின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்ட ஊட்டச்சத்து மற்றும் பொருளாதார நன்மைகளைக் கொண்ட பல் நோக்கு ரீதியான தலையீட்டை ஏற்படுத்தலை நோக்காகக் கொண்டது. இவ் வகையான ஒருங்கிணைந்த பாடசாலை மதிய உணவு வேலைத் திட்டங்கள் நீண்ட காலத்திற்கு வறுமையைக் குறைப்பதற்கு, கல்விக்கான முதலீட்டின் பெறுபேற்றை அதிக பட்சமாக்குவதற்கு உதவுகின்றன. அதன் பிரகாரம், கல்வி அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் தொழிநுட்ப உதவியுடன் பின்வரும் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

I. வீடு தொடர்பான பாடசாலை மதிய நேர உணவு வேலைத்திட்டம்

சிறு விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்தல், பாடசாலை போசனையை ஒருங்கிணைத்தல், தேசிய பொருளாதாரத்தின் விருத்தியை மேம்படுத்துதல் போன்ற நேர்மறையான தாக்கங்களினூடாக, வறுமையின் தீய சுழற்சியை உடைத்தலினூடாக அடுத்த தலைமுறைக்குரிய போசணை மற்றும் கல்வியின் வெற்றியை நோக்கி நகர்த்தலாம். உள் நாட்டு கொள்வனவுகளினூடாக பாடசாலை உணவுகள் தொடர்பான கேள்விகளை அதிகரிக்கலாம். உள் நாட்டு சிறு விவசாயிகளிடமிருந்து உற்பத்திகளை கொள்வனவு செய்வதினூடாக பாடசாலை போசனைகளின் பிரதிபலன்களை விருத்தி செய்யலாம். ஒரு புதுமையான அங்கமாகிய வீட்டு அடிப்படையிலான பாடசாலை உணவு வேலைத் திட்டம் சிறு விவசாயிகளை முன்னறிவிப்பு செய்யக்கூடியதாக இருப்பதுடன் நிலையான உள்நாட்டு சந்தையில் நுழைவதற்கான பங்களிப்பை வழங்குவதுடன் ஒருங்கிணைந்த செயற்பாட்டினூடாக மேற்கொள்ளும் அவ்வாறான நுழைவினூடாக உயர்ந்தபட்ச பிரதிபலன்களும் பெறப்படுகிறது. உள்நாட்டு விவசாய உற்பத்தி மற்றும் அதனுடன் இணைந்த பாடசாலை மதிய உணவு வேலைத்திட்டங்கள் சிறு விவசாயிகளிற்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் கணிக்கக்கூடிய சந்தையை உருவாக்குவதன் மூலம் சந்தையில் ஈடுபடும் அபாயத்தைக் குறைக்கலாம். வீட்டு அடிப்படையிலான பாடசாலை உணவு வேலைத் திட்டத்தின் உயர்ந்த பட்ச இலக்காக, ஆரம்ப நிலை பாடசாலைப் பிள்ளைகளின் கல்விப் பெறுபேறுகளையும் போசனையையும் மேம்படுத்துவதற்காக சிறு விவசாயிகளுடன் நிலையான ஒருங்கிணைப்புடன் பாடசாலை உணவு வேலைத் திட்டத்தை விருத்தி செய்தலாகும். அதன் பிரகாரம், தனமல்வில மற்றும் வில்கமுவ கல்வி வலயங்களில் அமைந்துள்ள 10 பாடசாலைகளில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அ) வியாபார மத்திய நிலையத்தை நிறுவுதல்

சிறு விவசாயிகளுக்கான சந்தை உறவுகளை வலுப்படுத்த இரண்டு கல்வி வலயங்களிலும் இரண்டு வியாபார மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டன. ரூபாய் முதலீடு 1.75 மில்லியன் ஆகும்.

ஆ) உணவு விநியோகத்தலிற்கான பங்களிப்பு

84 உணவு விநியோகத்தர்களிற்காக கழிவகற்றல் மற்றும் போசனையான உணவு சமைத்தலிற்கான வசதிகளை வழங்குவதற்காக ஆயிரம் சமையல் உபகரணங்கள் மற்றும் பாடசாலை உணவு வேலைத் திட்டத்துடன் தொடர்புடைய பிற உபகரணங்கள்

உட்பட பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. முதலீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 3.7 மில்லியன் ஆகும்.

இ) கோழிப்பண்ணையாளர்களுக்கு உதவி

பாடசாலைகளில் மதிய உணவு வேலைத் திட்டத்திற்காக முட்டை விநியோகிக்கும் திறனை மேம்படுத்துவதற்காக 33 கோழிப்பண்ணையாளர்களுக்கு குஞ்சுகள், கோழிப்பண்ணைகள் மற்றும் கோழி உணவு என்பன வழங்கப்பட்டன. அரச கால்நடை வைத்திய அலுவலகங்கள் மூலம் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன. ரூ. 6.04 மில்லியன் முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈ) கோழி உணவு உற்பத்தி அலகொன்றை நிர்மாணித்தல்

கோழிப்பண்ணையாளர்களுக்கு கோழி உணவை உற்பத்தி செய்வதற்காக வில்கமுவவில் கோழி உணவு உற்பத்தி அலகொன்று நிறுவப்பட்டது. 1.16 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

உ) பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

பயிர்ச் செய்கை, கோழி முகாமைத்துவம், கோழி உணவு உற்பத்தி மற்றும் வியாபார அபிவிருத்தித் திட்டம் போன்றன உள்ளடங்கலாக வெவ்வேறு வகையான 36 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பயனாளிகளிற்கு நிகழ்த்தப்பட்டன. மேற்கொள்ளப்பட்ட முதலீடு ரூபாய் 0.8 மில்லியன் ஆகும்.

II. டின் மீன்கள் விநியோகம்

உலக உணவு வேலைத் திட்டத்திற்காக ரூ.131.5 மில்லியன் பெறுமதியான 181.45 மெட்ரிக் தொன் டின் மீன்கள் ஜப்பான் அரசால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. அந்த டின் மீன்கள் கல்வி அமைச்சினூடாக 220,000 சிறுவர்களிற்கு விநியோகிக்கப்பட்டன. தொற்றுநோய்களின் போது பாடசாலைகள் மூடப்பட்டதனால் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் பங்கீடாக உணவு விநியோகிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக ரூபா 39 மில்லியனானது வீட்டு கொண்டு செல்லும் உணவுப் பங்கீட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டது.

3. இலங்கையில் பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய குழுக்கள் மற்றும் சிறு விவசாயிகளின் ஆண்டு முழுவதுமான வாழ்வாதாரம் மற்றும் பின்னடைவை தாங்கிக் கொள்ளும் தன்மையை வலுப்படுத்துதல்.

அபாயங்களிற்குட்படுகின்ற சமூகத்தில் வாழ்வாதார வேலைத்திட்டங்களைப் பன்முகப்படுத்துவதன் மூலம் இயற்கை பேரழிவுகளுக்கு எதிரான திட்டத்தின் கீழ் நீர் சேகரிக்கும் திறன் மற்றும் களஞ்சியப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் என்பவற்றை வீட்டுரிமையாளர்களினுள் உருவாக்குதல், நீர்ப்பாசன முறைகளை மறுசீரமைத்தல் மற்றும் இளைஞர்களுக்கான விவசாய அபிவிருத்தி போன்ற வேலைத்திட்டங்களை உள்ளடக்கியது. அதன் பிரகாரம், மட்டக்களப்பு, மன்னார், மாத்தளை, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய 05 மாவட்டங்களின் காலநிலை மாற்றங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக மேற்படி நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

i. சிறு நீர்ப்பாசன மறுசீரமைப்பு

2019 முதல் 2022 வரையிலான 04 வருட காலப்பகுதியில் 80 சிறிய குளங்களை புனரமைப்பது இலக்காகும். அதன் பிரகாரம், 2021 ஆம் ஆண்டு 85.47 மில்லியன் ரூபா முதலீட்டில் 23 குளங்கள் புனரமைக்கப்பட்டன. நீர்ப்பாசன நிலத்தின் அளவு 1,103 ஏக்கரில் இருந்து 1,393 ஏக்கராக 27% ஆல் அதிகரித்துள்ளது. எதிர்பார்த்த நெல் விளைச்சல் 3,860 மெட்ரிக் தொன்னிலிருந்து 5,850 மெட்ரிக் தொன்னாக 34% ஆல் அதிகரித்துள்ளது. 782 விவசாயிகள் குளங்கள் மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர். இவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.1,100 வீதம் மாதம் ஒன்றுக்கு 20 நாட்கள் வீதம் 6 மாதங்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. பயனாளிகளுக்கான மொத்தக் கொடுப்பனவு 43 மில்லியன் ரூபாவாகும். 900 குடும்பங்கள் பயனடைந்தன.

ii. விவசாயக் கிணறுகளை மறுசீரமைப்பதற்கு உதவுதல்

வறட்சியின் போது விவசாய நடவடிக்கைகளுக்கு தண்ணீர் பெறக் கூடியதாக 950 விவசாயக் குடும்பங்களுக்கு 950 விவசாயக் கிணறுகளை நிர்மாணித்தல் அல்லது புனரமைத்தல் இலக்காகக் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக பயனாளிகளுக்கு தேவையான பயிற்சி, விதைகள், நடவுப் பொருட்கள் மற்றும் சந்தை இணைப்புகள் வழங்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டிற்கான புனரமைக்கப்பட்ட விவசாய கிணறுகளின் எண்ணிக்கை 201 ஆக இருந்ததுடன் 182 விவசாய கிணறுகள் முழுமையாக புனரமைக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன. மேற்கொள்ளப்பட்ட முதலீடு 33.48 மில்லியன் ரூபாவாகும்.பெரும்பாலான விவசாயிகள் விவசாயக் கிணறுகளை விரிவாக்குவதற்கு மற்றும் கிணறுகளை நிர்மாணிக்கும் பொழுது தரத்தை மேம்படுத்துவதற்கும் கருத்திட்ட உதவிக்கு மேலதிகமாக தமது பணத்தை பயன்படுத்தியதாக அவதானிக்க முடிந்தது. ஒரு வீட்டைப் பெறுபவருக்கு ரூபாய் 84,000 வழங்கப்பட்டது.

iii. விவசாயக் குளங்கள் அமைத்தல்

மொனராகலை மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மழை நீர் மற்றும் கழிவுநீரை சேகரிக்கும் வகையில் 62 விவசாயக் குளங்கள் நிர்மாணிக்கப்பட்டன. வறண்ட காலங்களில் அந்த நீர் பயன்படுத்தப்படுகிறது. மேலும், சில விவசாயிகள் குளங்களில் நன்னீர் மீன் வளர்ப்பையும் மேற்கொண்டனர். மொத்த முதலீடு 4.96 மில்லியன் ரூபாவாகும்.

iv. இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களை விருத்தி செய்தல்

இக் கருத்திட்டத்தின் நோக்கம் இளைஞர், யுவதிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காக அவர்களின் திறனை விருத்தி செய்வதற்கு பயிற்சி அளிப்பதாகும். பயிற்சியாளர்களுக்கு கார், விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்க்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில், பாடசாலைக் கல்வியை பூரணப்படுத்திய 43 மாணவர்களிற்கு பயிற்சி வழங்கப்பட்டதுடன் பயிற்சி காலத்தில் மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. மேலும் பயிற்சிக்கு பின்னர் அவர்களுக்கு சீருடைகளும் வழங்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக, வில்கமுவ, தனமல்வில மற்றும் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள மூன்று பயிற்சி நிலையங்களில், பயிற்சி வேலைத்திட்டங்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்குவதன் மூலம், அந்த பயிற்சி நிறுவனங்களை புனர் நிர்மாணம் செய்வதன் மூலமும் வலுப்படுத்தப்பட்டுள்ளன. மொத்த முதலீடு 9.5 மில்லியன் ரூபாய் ஆகும்.

v. வணிக பெருந்தோட்டங்களை வலுப்படுத்துதல்

கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் வானிலை நிலைமைகளால் அழுத்தத்தினால் இடர்களை எதிர்கொள்கின்ற விவசாயிகளின் வருமானம் மற்றும் போசணை நிலையை விருத்தி செய்தல் இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். மட்டக்களப்பு, மன்னார், மாத்தளை, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கு மா மற்றும் முந்திரி நாற்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிக்கு 20 முந்திரி நாற்றுகள் அல்லது 25 TJC மாங்கன்றுகள் வழங்கப்பட்டன. அதன் பிரகாரம், 1,132 விவசாயிகளுக்கு 28,300 TMJ மா கன்றுகளும், 1,160 விவசாயிகளுக்கு 23,200 முந்திரி நாற்றுகளும் வழங்கப்பட்டன. பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை 2,292. இக் கருத்திட்டம் சீனி, சோளம், முந்திரி, மிளகு, கறுவா, கராம்பு தொடர்பான கைத்தொழில்களின் ஏற்றுமதி உட்பட சிறு பயிர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் இலங்கை முந்திரி கூட்டுத்தாபனத்துடன் ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. உலக உணவு வேலைத் திட்டம் ரூ.5.8 மில்லியன் முதலீடு செய்தது. 2021 பெரும் போகத்தில் பயிர்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

vi. வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள்

இக் கருத்திட்டம் சிறு விவசாயிகளின் திறனை வலுப்படுத்த உதவியது. ஆடு நிர்வாகம் , கோழி நிர்வாகம் கால்நடை நிர்வாகம் மற்றும் வாழ்வாதார பயிற்சி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட செயற்பாடுகள் உள்ளடங்கும்.

அ) ஆட்டுப்பண்ணைகளை செயற்படுத்தல்

ஆடுகளுக்கு 175 வீடுகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 172 ஆடு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. தற்போது ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள ஆடு வளர்ப்போரில் இருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். ஒரு விவசாயிக்கு புதிய ஆடு வீடு கட்ட 215,000.00 வழங்கப்பட்டது. மொத்த முதலீடு 37.63 மில்லியன் ரூபாவாகும். மொத்த முதலீடு ரூபா 37.63 மில்லியன் ஆகும்

ஆ) கோழிப்பண்ணையை செயற்படுத்தல்

145 கோழிப்பண்ணைகள் ஆரம்பிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 145 கோழிப்பண்ணைகள் நிறுவப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள், கோழிக் கூடுகள் மற்றும் 4 மாதங்களுக்கு தேவையான கோழி உணவுகள் என்பன வழங்கப்பட்டன. கோழிக் கூடுகள் வீடுகள் நேரடியாக வீடுகளுக்கு வழங்கப்பட்டதுடன் கோழிக் குஞ்சுகள் மற்றும் கால்நடை உணவுகளை கொள்வனவு செய்வதற்கு ஒரு விவசாயிக்கு ரூபா 22,300.00 வழங்கப்பட்டது. ரூபாய் 3.18 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது.

இ) கால்நடை கட்டுப்பாட்டு அலகுகளை செயற்படுத்துதல்

143 கால்நடை தொழுவங்கள் நிர்மாணித்தல் இலக்காகக் காணப்பட்டதுடன் 120 கால்நடை தொழுவங்களின் நிர்மாணம் நிறைவு செய்யப்பட்டன. கால்நடைத் தொழுவத்தை நிர்மாணிப்பதற்காக ஒரு பயனாளிக்கு ரூ. 285,000 மற்றும் புல் வளர்ப்புக்கு ரூ. 5,000 உம் வழங்கப்பட்டன. மொத்த முதலீடு ரூபாய்37.8 மில்லியன் ஆகும்.

ஈ) நீர்த்தேக்கங்களில் விரலொன்றை சேமித்தல்

நீர்த்தேக்கங்களில் 2 மில்லியனுக்கும் அதிகமான விரலி குஞ்சுகள் வைப்பு செய்யப்பட்டுள்ளது, தேசிய நீரியல் அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உதவியுடன் ஆகும். 23 நன்னீர். எதிர்பார்க்கப்படும் மீன் அறுவடை 975 மெட்ரிக்

தொன் ஆகும். (உயிர் பிழைப்பு விகிதம் 65% மற்றும் சராசரி மீன் எடை 750 கிராம்.) மொத்த முதலீடு ரூ.5.13 மில்லியன் ஆகும்.

உ) வாழ்வாதார நடவடிக்கைகள் குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு

வாழ்வாதார நடவடிக்கைகள் தொடர்பாக பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 285 நிர்ணயிக்கப்பட்ட போதிலும், கோவிட் தொற்றுநோய் காரணமாக 121 வேலைத்திட்டங்கள் மட்டுமே நிறைவு செய்யப்பட்டுள்ளன. மொத்த முதலீடு ரூபாய்1.2 மில்லியன் ஆகும்.

4. இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இளம்பெண்கள் மற்றும் குழந்தை பிறக்கும் வயதுடைய பெண்களின் ஊட்டச்சத்தை 2025 ஆகும் பொழுது விருத்தி செய்தல்

i. திரிபோஷ உற்பத்திக்காக சோளம் கொள்முதல்

திரிபோஷ உற்பத்திக்காக சோளத்தை கொள்வனவு செய்வதற்கு இக் கருத்திட்டம் உதவியது. அதன் பிரகாரம், பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள இலங்கை திரிபோஷ நிறுவனத்திற்கு ரூபா 192.08 மில்லியன் வழங்கப்பட்டது. கொள்முதல் செய்யப்பட்ட சோளத்தின் கையிருப்பு 2,159 மெட்ரிக் தொன் ஆகும். திரிபோஷ விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம், சோளத்தை சேமித்து வைப்பதற்காக புதிய சிலாப்களை அமைக்க பயன்படுத்தப்படும்

ii. உணவு பாதுகாப்பு மதிப்பீடு

உணவைப் பெற்றுக் கொள்ளும் திறன், அனுமதி, பயன்பாடு மற்றும் ஸ்திரத்தன்மை சமமற்ற விநியோகம் காரணமாக மாவட்டங்களுக்குள் உணவுப் பாதுகாப்பின்மையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுவதுடன் உணவுப் பாதுகாப்பின்மையின் காரணமாக துரித அபிவிருத்திக் கருத் திட்டங்களை செயற்படுத்த தேவையான பாதிப்புக்குட்படும் மாவட்டங்கள் மற்றும் வலயங்களையும் இனங்காண்பது முடிவு செய்யப்பட்டது. இந்த ஆய்வின் முக்கிய நோக்கமானது, பிரதேச செயலக மட்டத்தில் உணவுப் பாதுகாப்பின்மையின் இடஞ்சார்ந்த பிரதிநிதித்துவத்தைக் காட்டும் வரைபடங்களைத் தயாரிப்பதாகும். ஏனைய பிரதிபலங்களாவன நாட்டின் உணவுப் பாதுகாப்பு நிலைமையை மதிப்பிடுவதற்கும், பாதிப்புக்குட்படும் குழுக்களின் மீது விஷேட கவனம் செலுத்தி அபிவிருத்தித் தலையீடுகளை சிறந்த முறையில் தயாரிப்பதற்கு ஆதார அடிப்படையிலான முடிவுகளை எடுப்பதற்கு வசதியாகத் தகவல்களை வழங்குவதாகும். பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தினால் இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்டது.

சுருக்கமான நிதி முன்னேற்றம்

நிதி முன்னேற்றம் - 2021 (ரூ. மில்லியன்)

| நிதிக் குறியீடு | நிதி ஏற்பாடுகள் | திருத்தப்பட்ட | வெளியிடப்பட்ட நிதி | செலவு | % |
|---|---|---|---|---|---|
| 13 | 370.0 | 528.08 | 528.08 | 528.08 | 100 |
| 17 | 105.0 | 69.00 | 69.00 | 58.028 | 86 |
| 16 | 300.0 | - | - | - | - |
| மொத்தம் | 775.0 | 597.08 | 597.08 | 586.108 | 94 |

.....................................................

பி.க.உ / க.உ / நிறுவனத் தலைவர்

R.H.W.A.Kumarasiri
Director General
National Planning Department
Ministry of Finance
The Secretariat
Colombo - 01

# அத்தியாயம் 03 - 2021 மார்கழி 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய ஒட்டுமொத்த நிதிச் செயற்திறன்

## 3.1. நிதிச் செயற்றிறன் கூற்று

**ACAF**

**31.12.2021** இல் முடிவடைந்த ஆண்டுக்குரிய நிதிச் செயற்திறன் கூற்று

| பாதீடு 2021 | | குறிப்பு | உண்மை 2021 | மீண்டும் திருத்தப்பட்ட 2020 | |
|---|---|---|---|---|---|
| ரூ. | | | ரூ. | ரூ. | |
| - | **வருமானம்** | | - | - | |
| - | **வருமான வரி** | 1 | - | - | |
| - | **உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகளிற்கான வரி** | 2 | - | - | ACA-1 |
| - | சர்வதேச வர்த்தகத்திற்கான வரி | 3 | - | - | |
| - | வரியற்ற வருவாய் மற்றும் பிற | 4 | - | - | |
| - | **மொத்த வருவாய் பெறுவனவுகள் (அ)** | | - | - | |
| - | **வருவாய் அல்லாத பெறுவனவுகள்** | | - | - | |
| - | திறைசேரிக் கட்டுநிதி | | **210,094,000** | **108,053,408** | **ACA-3** |
| - | வைப்புக்கள் | | **73,835** | **85,906** | **ACA-4** |
| - | முற்பணக் கணக்குகள் | | **11,375,698** | **7,232,008** | **ACA-5** |
| | வேறு பெறுவனவுகள் | | - | - | |
| - | **மொத்த வருமானமற்ற பெறுவனவுகள் (ஆ)** | | **221,543,533** | **115,371,322** | |
| - | **மொத்த வருமானப் பெறுவனவுகள் மற்றும் வருமானமற்ற பெறுவனவுகள் (இ) = (அ) +(ஆ)** | | **221,543,533** | **115,371,322** | |
| | **திறைசேரிக்கு நிதி அனுப்புதல் (ஈ)** | | **1,402,031** | **912** | |
| | **தேறிய வருமானம் பெறுவனவுகள் மற்றும் வருமானம் அல்லாத பெறுவனவுகள் உ = (இ) - (ஈ)** | | **220,141,502** | **115,370,409** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **கழிக்கப்பட்டது :**<br>**செலவுகள்** | | | | |
| **-** | **மீண்டு வரும் செலவுகள்** | | **-** | **-** | |
| 127,900,000 | **சம்பளம், ஊதியங்கள் மற்றும் ஏனைய பணியாளர் அனுகூலங்கள்** | **5** | **105,035,578** | **83,748,297** | **ACA-2(ii)** |
| 45,595,000 | வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் | **6** | **33,727,356** | **20,017,346** | |
| 2,300,000 | மானியங்கள், வழங்கல்கள் மற்றும் மாற்றங்கள் | **7** | **1,278,122** | **950,429** | |
| - | செலுத்திய வட்டி | **8** | **-** | **-** | |
| - | ஏனைய மீண்டு வரும் செலவுகள் | **9** | **-** | **-** | |
| **175,795,000** | மொத்த மீண்டு வரும் செலவுகள் (ஊ) | | **140,041,055** | **104,716,072** | |
| | **மூலதனச் செலவுகள்** | | | | |
| 6,000,000 | **மூலதனச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடுகள்** | **10** | **6,859,480** | **1,216,613** | |
| 5,360,000 | **மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்துதல்** | **11** | **7,182,999** | **3,887,968** | |
| 775,000,000 | **மூலதன இடமாற்றங்கள்** | **12** | **586,114,559** | **-** | **ACA-2(ii)** |
| - | **நிதி சொத்துக்களைக் கையகப்படுத்துதல்** | **13** | **-** | **-** | |
| 5,500,000 | திறன் விருத்தி | **14** | **61,000** | **794,770** | |
| 14,064,620,000 | ஏனைய மூலதன செலவுகள் | **15** | **10,011,290,662** | **32,158,606** | |
| **14,856,480,000** | **மொத்த மூலதனச் செலவுகள் (எ)** | | **10,611,508,701** | **38,057,957** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | **81,285** | **78,456** | **ACA-4** |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | **15,032,558** | **6,938,967** | **ACA-5** |
| | **ஏனைய பிரதான பதிவேட்டுக் கணக்குச் செலவுகள்** | | **-** | **-** | |
| | **பதிவேட்டுச் செலவுகள் (ஏ)** | | **15,113,843** | **7,017,423** | |
| | **மொத்தச் செலவுகள் ஐ = ஊ + எ + ஏ** | | **10,766,663,600** | **149,791,451** | |
| **15,032,275,000** | **2020** மார்கழி **31** இன் படி மீதி ஒ = உ - ஐ | | (10,546,522,098) | (34,421,042) | |
| | இறுதி ஒப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீதி | | (10,546,522,098) | (34,421,042) | **ACA-7** |

| | | | |
|---|---|---|---|
| டிசம்பர் 31 இல் உள்ள அதிகபட்ச மீதி | - | - | ACA-3 |
| | - | - | |

3.2. நிதி நிலமைக் கூற்று

**2021.12.31** திகதிக்குரிய
நிதி நிலமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை<br>2021<br>ரூ. | <br>2020<br>ரூ. |
|---|---|---|---|
| **<u>நிதி அல்லாத சொத்துக்கள்</u>** | | | |
| சொத்து மற்றும் உபகரணங்கள் | | 121,445,431 | 87,441,485 |
| **<u>நிதிச் சொத்துக்கள்</u>** | | | |
| முற்பணக் கணக்கு | ACA-5/5(A) | 17,699,015 | 14,042,155 |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | ACA-3 | 1,402,031 | 912 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **140,546,477** | **101,484,552** |
| தேறிய சொத்துக்கள் / நிறை நிகரச் சொத்துக்கள் | | 17,699,015 | 14,034,705 |
| சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள் ஒதுக்கம் | | 121,445,431 | 87,441,485 |
| முற்பண வாடகை மற்றும் வேலை | ACA-5(B) | | |
| **<u>நடைமுறை பொறுப்புக்கள்</u>** | | | |
| வைப்புக் | ACA-4 | | 7,450 |

| | | | |
|---|---|---|---|
| கணக்கு | | | |
| கட்டுநிதி மீதி | ACA-3 | 1,402,031 | 912 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 140,546,477 | 101,484,552 |

பக்க இலக்கம் 07 முதல் 37 வரை ஏசீஏ 2 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 38 முதல் 46 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
